மாரநாதா
ர்க்கதரிசன
ச்சரிப்பு

World News report by
Don E. Stanton

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) <u>இலவசமாக (மத்தேயு 10:8)</u> உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: *www.WordOfGod.in*

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely <u>free of cost (Matt 10:8)</u> forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

எதிர்வரும் முழு உலக
பெரும் பூமியதிர்ச்சி!
(THE COMING WORLD EARTH QUAKE)

Don. E. STANTON

மாரநாதா தீர்க்கதரிசன எச்சரிப்பு
50, ரெயில்வே ஸ்டேஷன் ரோடு
கோடம்பாக்கம், சென்னை - 600 024.

மாரநாதா
(இயேசு வருகிறார்)

"கொஞ்சக்காலத்துக்குள்ளே இன்னும் ஒருதரம் நான் வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் வெட்டாந் தரையையும் அசையப்பண்ணுவேன்" (ஆகாய் 2:6)

"தேசம் நொறுங்கவே நொறுங்கும், தேசம் முறியவே முறியும், தேசம் அசையவே அசையும்"! (ஏசாயா 24:19).

கர்த்தருக்குள் அருமையான வாசகர்களுக்கு ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள்! கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தீர்க்கதரிசனமாக உரைத்தபடி பல இடங்களில் பஞ்சங்களும் கொள்ளைநோய்களும் பூமியதிர்ச்சிகளும் சம்பவித்துக் கொண்டும் பூமியில் அக்கிரமங்களும் பாவங்களும் நிர்விசாரமும் பெருகிக்கொண்டும் இருப்பதை நாம் காண்கிறோம். இவைகள், கர்த்தருடைய வருகைச் சமீபமாயிருக்கிறது என்றும் இது கடைசிக்காலம் என்றும் அறிவிக்கின்றன.

கடந்த 58 ஆண்டுகளாக இந்தியத் துணைக்கண்டத்தில் ஏற்பட்டிராத பெரும்பூமியதிர்ச்சி கடந்த செப்டம்பர் மாதம் இந்தியாவின் சில மாநிலங்களில் ஏற்பட்டு பேரழிவு உண்டானதைச் செய்திகள் வாயிலாக நாம் அறிந்தோம். இவையாவும் நமக்கு ஓர் எச்சரிப்பாகவும் கூட இருக்கின்றன.

இந்தப்புத்தகத்தில் பூமியதிர்ச்சிகளைக் குறித்து விரிவாக எழுதப்பட்டுள்ளது. ஏற்கனவே 1962ம் ஆண்டு ஜனவரியில் ஒரு புத்தகம் வெளியானது என்றாலும் இதில் இன்னும் விளக்கமாக கூறப்பட்டுள்ளது. இப்பூமியில் இதற்குமுன் சம்பவியாததும் இனி ஒருபோதும் சம்பவியாததும் கடைசி பூமியதிர்ச்சிபற்றியும் சொல்லப்பட்டுள்ளது. வாசகர்கள் இப்புத்தகத்தை வாசிப்பது மட்டுமல்லாமல் கர்த்தராகிய இயேசுவை இரட்சகராக ஏற்றுக்

கொள்ளாதிருந்தால் ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன். இரட்சிக்கப்பட்டு சத்தியத்தை அறிந்தவர்கள் ஒவ்வொருவரும் கர்த்தருக்கு உகந்தவர்களாய் ஜீவித்து, கிறிஸ்துவின் வருகைக்கென்று ஆயத்தப்படுவோமாக!

அசைந்து குலுங்கும் பூமி!

வானமும் பூமியும் தேவனுடைய கரத்தின் கிரியைகளாயிருக்கின்றன. அவருடைய நியமத்தின்படி அவை இருக்கின்றன, இயங்குகின்றன. பூமியில் தேவனால் உண்டாக்கப்பட்டவர்களான மனிதரோ தங்கள் அறிவியல் முன்னேற்றம் குறித்து மேட்டிமைக்கொண்டு, தேவனை விட்டுத் தூரம் போய்க் கொண்டிருக்கின்றனர். இதனால் அக்கிரமமும் அவபக்தியுமுள்ள இப்பூமியையும் அதன் அமைவிடமான வானத்தையும், பூமியின் பெரும்பரப்பை மூடியுள்ள பெருங்கடலையும் இன்னும் ஒருதரம் அசைப்பேன் என்று தேவன் எச்சரித்திருக்கிறார். இன்னும் ஒருதரம் என்பதால் ஏற்கனவே ஒருதரம் பூமியை தேவன் அசைத்தார் என்பது சொல்லாமலே விளங்கும். நோவாவின் காலத்தில்தான் தேவன் வானத்தையும் பூமியையும் அசைத்தார். அதனால் பெரும் வெள்ளம் உண்டாகி நோவாவின் குடும்பத்தாரைத் தவிர மற்ற எல்லா மனிதரையும், நாசியிலே சுவாசமுள்ள மற்ற உயிர்கள் யாவற்றையும் அழித்தது.

இப்பொழுதும் கடந்த சில மாதங்களாக வடதுருவப் பகுதியில் பூமியின் பின்னும் முன்னுமாக அசைந்து குலுங்கிக் கொண்டிருக்கின்றது. விண்வெளியில் சுற்றிவரும் அது பலமாகக் குலுங்கிச் சுற்றுகிறது. இதற்குக் காரணம் பல மோசமான பூமி அதிர்ச்சிகள் அதிகமாக ஏற்படுவதுதான் என்று கூறும் விஞ்ஞானிகள் பூமியின் போக்கு குறித்து திகைத்து பயந்துபோய் இருக்கின்றனர்.

"பூமி கூடிய சீக்கிரம் குலுங்கி அழிந்து போகப்போகிறது ஒவ்வொருமாதமும் கடக்கும்போது அந்த அழிவு நெருங்கி வருகின்றது. அந்த அழிவு இன்றே கூடச் சம்பவிக்கலாம். எனவே இதைக் குறித்து தீவிர ஆராய்ச்சிகள் அவசரமாக நடைபெற்று வருகின்றன" என்று 1981ம் ஆண்டிலேயே ஆஸ்திரேலியா நாட்டில் வெளியாகும் "தி சன்" என்ற செய்தித்தாளில் கட்டுரை வெளியானது.

விஞ்ஞானிகள் கூறும் காரியங்கள் அப்படியே நடப்பதில்லை. ஆண்டுக்கு ஆண்டு அவர்களுடைய கணிப்புகள் மாறிவிடுகின்றன, எனவே இந்தச் செய்தி எனக்குப் பயமுண்டாக்கவில்லை என்று சில வாசகர்கள் கூறி இதை ஒதுக்கிவிடலாம். ஆனால் வேதம் சொல்லும் ஒவ்வொரு முன்னறிவிப்பும் நிறைவேறி வருகின்றது. கடைசியான பெரிய முழு உலக பூமி அதிர்ச்சியும் நிச்சயமாய் ஏற்படும் அதை நாம் தள்ளி விடவே முடியாது. இந்திய நாட்டில் ஏற்பட்ட மராத்வாடா நடுக்கம்ஒரு கடுமையான எச்சரிப்பாகும்.

மராத்வாடா பூமியதிர்ச்சி!

கடந்த செப்டம்பர் 30ம் தேதி அதிகாலை நேரத்தில் மக்கள் ஆழ்ந்த தூக்கத்தில் இருந்தபோது இந்தியாவின் எட்டு மாநிலங்களைப் பெரியதோர் நில நடுக்கம் உலுக்கியது. ரிச்டர் அளவுகோலில் 6.4 புள்ளிகள் பதிவான அந்த பூமி அதிர்ச்சியின் ஆற்றல் ஒரு நீர்மவாயுக்குண்டின் (Hydrogen bome) ஆற்றலுக்குச் சமமாகும். பூமியதிர்ச்சியின் மையம் தென்கிழக்கு மராட்டிய மாநிலத்தில் மராத்வாடா பகுதியிலுள்ள லட்டூர் மாவட்டத்தில் இருந்தது. பூமியானது ஒரு பெரிய குண்டு வெடிப்பதுபோல வெடித்தது என்று தப்பிப்பிழைத்த ஒருவர் கூறினார். ஒரு குடிகாரனைப்போல பூமி முன்னும் பின்னும் வெறித்தாடின. அந்த 47 வினாடிகள் விழித்திருந்த மக்களுக்கு ஒரு நித்தியம் போலக் காணப்பட்டது.

நிலநடுக்க மையத்திற்கு மிக அருகாமையிலுள்ள கில்லாரிக் கிராமம் ஓர் அங்குல இடைவெளியில்லாமல் குண்டுவீசி அழிக்கப்பட்டப் பகுதிப்போலக் காணப் பட்டது. அந்தக் கிராமத்தின் 90./. பரப்பு தரைமட்ட மாய்ப்போனது. லட்டூர் மற்றும் உஸ்மானுபாத் மாவட் டங்களில் 50 கிராமங்கள் முழுவதும் அழிந்துபோயின. முழுக்குடும்பங்கள் அழிந்தன. சஸ்டூர் என்ற கிராமத்தில் இறந்தவர்களுக்காக அழுவதற்கு ஒருவராவது உயிர் பிழைக்கவில்லை

நமது மாரநாதா இயக்கத் தலைமையகம் அமைந் துள்ள செகந்திராபாத்திலிருந்து 200 மைல் தொலைவுக்கும் குறைவான தொலைவில் நிலநடுக்கமையம் அமைந்திருந் தது இங்கேயும் வீடுகளில் பாத்திரங்கள் அசைந்தாடின. தூங்கிக்கொண்டிருந்த நானும் சந்தடியையும் இரைச்சலை யும் கேட்டு விழித்துக்கொண்டேன். கனவு என்று எண்ணிக்கொண்டிருந்த எனக்கு பறவைகளின் கூச்சலைக் கேட்டபின்புதான் லேசான நிலநடுக்கம் ஏற்பட்டிருக்கக் கூடும் என்ற எண்ணம் ஏற்பட்டது.

கில்லாரியில் தப்பிப்பிழைத்த ஒருவர் அந்த நேரத்தில் படுக்கையில் சுருண்டுபடுத்துக்கொண்டு ஒரு மர்ம நாவல் படித்துக் கொண்டிருந்தார் திடீரென்று ஒரு பயங்கர சத்தம் கேட்டது. மின்சாரம் துண்டிக்கப்பட்டது. தொடர்ந்து ஒரு சரக்குவண்டித்தொடர் போவதுபோன்ற இரைச்சல் கேட்டது. அவர் படுக்கையிலிருந்து தூக்கி யெறியப்பட்டார். அவரும் அவர் மனைவியும் உயிர்த்தப்ப ஓடினார்கள். பின்பு இடிந்துபோன வீட்டில் இடுப்பளவு இடிபாடுகள் இடையே சிக்கியிருந்த தன் மாமனாரையும் அவர் மகனையும் காப்பாற்றினார் அவர். ஆனால் தனது உடன்பிறந்தாரின் 5 வயது மகனைக் காப்பாற்ற முடிய வில்லை.

தப்பிப்பிழைத்த இன்னொருவர் கூறினார், "நில நடுக்கம் ஏற்பட்டபின்பு ஹெலிகாப்டரின் சுழலி சுழலு

வது போன்று இரைச்சல் கேட்டுக்கொண்டேயிருந்தது. ஊஞ்சலில் ஆடுவதுபோல ஆடிக்கொண்டிருந்த நானும் என்னுடைய மனைவியும் இடிபாடுகளிலிருந்து தப்புவித்துக் கொண்டோம். ஆனால் எங்கள் 9 வயது மகளை நாங்கள் இழந்தோம்.''

ஒரு கிராமத்தில் 40 பேர் கூடி 10 நாட்கள் ஹிந்து விநாயக பண்டிகை முடித்து மதப்பாடல்களை விடிய விடியப் பாடிக்கொண்டிருந்தனர். நிலநடுக்கத்தில் அவர்கள் எல்லாம் உயிருடன் புதையுண்டனர்.

இந்தப் பகுதியில் 30,000 பேர் மாண்டுப்போனதாக மதிப்பிடப்பட்டது. அதற்கும் அதிகமாக இருந்திருக்கலாம். இந்தியத் துணைக்கண்டத்தில் கடந்த 58 ஆண்டுகளில் ஏற்பட்ட மோசமான நிலநடுக்கப் பேரழிவு இதுவாகும். 6.4 அளவுள்ள அதிர்ச்சி பெரிய அளவு அதிர்ச்சியாகும். ஆனாலும் உலகமெங்கும் இதைவிட பெரிய அளவிலான பூமியதிர்ச்சிகள் அவ்வப்போது ஏற்பட்டுக்கொண்டேயிருக்கின்றன (4 அளவுள்ள நிலநடுக்கம் 6. 4 அளவு நிலநடுக்கத்தைதவிட 100 மடங்கு கடுமையானதாகும். அக்டோபர் 2 ம் தேதி வடமேற்கு சீனாவில் 6.6 அளவுள்ள நிலநடுக்கம் ஏற்பட்டது. ஆனால் ஆட்சேதம் ஏதுமில்லை. அக்டோபர் 12 ம் தேதி 7.1 அளவுள்ள நிலநடுக்கம் டோக்கியோவைத் தாக்கியது அதில் ஒரே ஓர் ஆள் மட்டுமே மாண்டார். காரணம் என்னவென்றால் நிலநடுக்கமையம் வெகுதூரத்தில் பசிபிக் பெருங்கடலில் இருந்தது.

மராத்வாடா அதிர்ச்சியில் பேரழிவு உண்டாகப் பல காரணங்கள் உண்டு.

1. ஜனங்கள் தங்கள் வீடுகளில் தூங்கிக் கொண்டிருக்கும்போது அதிர்ச்சி ஏற்பட்டது.

2. கற்களும் சேறும் வைத்துக்கட்டப்பட்ட வீடுகள் நிறைந்த கிராமப்பகுதியில் நிலநடுக்கமையம் இருந்தது.

3. பருவமழை பெய்யும் காலத்தில் இந்த அதிர்ச்சி ஏற்பட்டது. பலவீடுகள் ஏற்கனவே அடைமழையினுல் பலமற்றுப்போயிருந்தன.

4. கிராமத்து ஜனங்கள் வழக்கமாக வீட்டிற்கு வெளியேதான் தூங்குவார்கள். ஆனுல் மழைக்காலமான தால் வெளியே குளிராயிருந்தது. இதனுல் அநேகர் குளிருக்கும் மழைக்கும் பயந்து உள்ளே படுத்து தூங்கிக் கொண்டிருந்தனர். அப்படித் தூங்கிக்கொண்டிருந்த யாவரும் புதையுண்டனர். வெளியே இருந்த பலரும் தப்பிப்பிழைத்தனர். நிலநடுக்கம் ஏற்பட்டு 10 நாட் களுக்கு 22 முறை, பெரிய அளவிலான பின் நடுக்கங்கள், ஏற்பட்டன.

அதிர்ச்சித் தரும் எச்சரிப்பு!

லட்டூரில் ஏற்பட்ட நிலநடுக்கம் இந்திய நாட்டுக்கும், ஒவ்வொரு தனி நபருக்கும் பலமான ஓர் எச்சரிப்பாகும் கடந்த ஆண்டு முழுவதும் தொடர்ச்சியாக நில அதிர்வு கள் மராத்வாடா பகுதியில் ஏற்பட்டுக்கொண்டிருந்தன. 1992 ஆகஸ்டு முதல் அக்டோபர் 23 வரை 125 நில அதிர் வுகள் கில்லாரியில் ஏற்பட்டன. அதில் ஒன்று 4.5 புள்ளி என்று பதிவாகியது. கடந்த ஆண்டு மொத்தம் 1050 லேசான அதிர்ச்சிகள் ஏற்பட்டன.

இந்த முறை ஏற்பட்ட பெரிய நிலநடுக்கம் பொது வாக உலக முழுவதுக்கும், குறிப்பாக ஒவ்வொரு வேதாகம விசுவாசிக்கும் எச்சரிப்பாகும். விசுவாசிகள் தீர்க்கதரிசனங்களை உணர்ந்து எதிர் வரப்போகும் பேராபத்துக்களைக் குறித்து எச்சரிப்புக் கொடுக்க வேண்டும்

கடைசிக் காலத்தைக் குறித்து இயேசுகிறிஸ்து சொன்னபோது கீழ்க்காணும் எச்சரிப்பை விடுத்தார்.

''ஜனத்துக்கு விரோதமாய் ஜனமும், ராஜ்யத்துக்கு விரோதமாய் ராஜ்யமும் எழும்பும்: பஞ்சங்களும்

கொள்ளை நோய்களும் உண்டாகும். பல இடங்களில் பூமியதிர்ச்சிகள் ஏற்படும்" (மத்தேயு 24:7).

பலநாடுகள் யுத்தங்களில் ஈடுபட்டுள்ளன (உள் நாட்டுப்போர், பிரச்சாரப்போர், கலகம், பயங்கரவாதம்) கொள்ளைநோய்களும் வாதைகளும் மக்களைத் தாக்கு கின்றன. உதாரணமாக ஆப்பிரிக்கா கண்டம் முழுவதிலும் ஊடுருவிப் பெருஞ்சேதம் விளைவித்த எய்ட்ஸ் என்னும் கொடியநோய் இப்பொழுது ஆசியாவில் காட்டுத்தீ போலப் பரவுகின்றது. அதை அடுத்து இப்பொழுது பூமிய திர்ச்சிகள் இவ்வரிசையில் சேர்ந்துக்கொண்டன. மேற் கண்ட வசனம் போன்ற பல எச்சரிப்புகளை வேதாகமம் கூறுகின்றது.

முன்னறிவிப்புகள்-உண்மையும் தவறும்!

அநேகம் ஆண்டுகளாகப் பல அரசியல்வாதிகளும், பொருளாதார நிபுணர்களும், விஞ்ஞானிகளும், ஞானி களும், வானஇயல் நிபுணர்களும், மந்திரவாதிகளும், மதவாதிகளும் கடைசிக்காலம் குறித்தும் உலகமுடிவு குறித்தும் பல முன்னறிவிப்புகளைக் கொடுத்துள்ளனர். உலகமுடிவு மற்றும் ஆபத்துகளுக்கு நாள் குறித்தவர்களும் உண்டு ஆனால் அவை யாவும் பொய்யாய்ப் போயின. அதனால் ஜனங்களுக்கு உலகமுடிவு குறித்து ஐயங்கள் உண்டாயின. முன்னறிவித்தவர்கள் தங்களுடைய வாக்கு நிறைவேறாமல் போனதற்காக விளக்கம் கொடுக்க வேண் டியவர்கள் ஆனார்கள்.

விஞ்ஞானம் வளர்ச்சி அடைந்துள்ளதால் இயற்கை இடர்களான பஞ்சங்கள், புயல்காற்றுகள், கொள்ளை நோய்கள், எரிமலை வெடிப்புகள், பூமியதிர்ச்சிகள், விண் கற்கள் விழுதல் என்பவற்றைப் பற்றி நம்பகமான முன்னறிவிப்புகளைத் தர முடிகிறது.

வேதாகமமோ தேவாதி தேவனாகிய சர்வவல்லவரு டைய வார்த்தையாக இருப்பதனால். நூற்றுக்கு நூறு உண்மையாயும், நம்பகமானதாகவும் இருக்கின்றது. உலக

முடிவுக்கோ பேராபத்துக்கோ மற்ற முன்னறிவிப்புகளுக்கோ தேதி எதனையும் வேதம் தருவதில்லை. ஆனால் அநேக சம்பவங்களைக் குறித்தும் ஆபத்துகளைக் குறித்தும் பூமியதிர்ச்சிகளைக் குறித்தும், கடைசியான பேரழிவைக் குறித்தும் வேதம் முன்னறிவித்துள்ளது. வேதத்தின் முன்னறிவிப்புகளில் பல நிறைவேறியுள்ளன, நிறைவேறி வருகின்றன. இன்னும்பல நிறைவேறும். தேவன் சோதிடம் கூறுபவரல்ல, ஆனால் இன்னும் ஒருமுறை பூமியை அசைக்கும்படி பேரண்டத்தில் ஏற்படப்போகும் பெருங்கொந்தளிப்பைப்பற்றி அவர் முன்னறிவித்துள்ளார். பழைய ஏற்பாட்டில் வரும் ஒரு தீர்க்கதரிசனத்தைக் கவனிப்போம்

"கொஞ்சக் காலத்துக்குக்குள்ளே இன்னும் ஒரு தரம் நான் வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் வெட்டாந்தரையையும் அசையப்பண்ணுவேன். சகல ஜாதிகளையும் அசையப்பண்ணுவேன். சகல ஜாதிகளாலும் விரும்பப்பட்டவர் வருவார்; இந்த ஆலயத்தை மகிமையினால் நிறையப்பண்ணுவேன் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்" (ஆகாய் 2:6-7).

இன்னும் ஒருதரம் என்ற வார்த்தையைக் கவனிப்போம். இந்தப் புத்தகத்தின் ஆரம்பத்தில் குறிப்பிட்டுள்ள செய்திக் குறிப்பினைக் கண்டதும் எனக்கு இந்த வார்த்தைதான் மனதில் உதித்தது இன்னும் ஒருதரம் ஏற்படப்போகும் அந்த அசைவை நோக்கி ஒவ்வொரு மாதமும் நாம் சமீபித்து வருகின்றபடியால் விஞ்ஞானிகள் தீவிரமாக ஆராய்ச்சிகள் மேற்கொண்டு வருகின்றனர். இன்னும் ஒரு தரம் நான் வானத்தையும் பூமியையும் அசையப்பண்ணுவேன் என்று தேவன் சொல்லுகிறார்.

முதலாவது அசைவு!

முதன்முதலாக பூமி எப்பொழுது அசைந்தது? நோவாவின் காலத்தில் பெருவெள்ளம் ஏற்பட்டபோது பூமி பலமாக அசைக்கப்பட்டது. முழுபூமியும் வெள்ளத்தினால் மூடப்பட்டது. வானத்தின்கீழே இருக்கும் சுவாச

முள்ள எல்லா உயிர்களையும் அழிக்க பூமியின்மேல் பெரு வெள்ளத்தை வரவழைப்பேன் பூமியிலுள்ள யாவும் மாண்டு போகும் என்று தேவன் சொல்லுகின்றார் (ஆதி 6:17). அதனால் பூமியின் ஒரு பகுதியில் அல்ல முழு பூமியிலும் அந்தவெள்ளம் உண்டாகும் என்பதே அதன்பொருள். சங்கீதம் 104:6ல் வாசிக்கிறோம். பர்வதங் களுக்கு மேலாகத் தண்ணீர்கள் நின்றது அந்தப்பெரு வெள்ளம் ஒருவருடகாலம் பூமியை மூடியிருந்தது. ஒரு வருடமும் பத்துநாட்களும் கழிந்தபின்பே பூமி காய்ந் திருந்தது. நீண்ட நாட்கள் வெள்ளம் பூமியை மூடியிருந்த படியால் பூமியின் நில அமைப்பில் பெரும் மாறுதல்கள் ஏற்பட்டன. காடுகள் புதையுண்டுபோயின. மாண்டு போன உயிர்களின் எலும்புக்கூடுகள் புதைந்து போயின. புதிய மலைகள் உண்டாயின.

நான் புனித நாட்டுப் பிரயாணம் மேற்கொண்டிருந்த போது தெற்கு யோர்தானில் உள்ள பெட்ரா நகருக்குப் போயிருந்தேன். அந்த நகரம் (இடம்) முழுவதும் ஒரு காலத்தில் தண்ணீரால் மூடப்பட்டிருந்தது என்று எங்கள் வழிகாட்டி கூறினர். பெருவெள்ளத்தினுல்தான் அங்குள்ள அற்புதமான அழகான பாறைப் படிவங்கள் உருவாயின.

ஆரம்பத்தில் 5 லிருந்து 6 டிகிரி சாய்வாகச் சுற்றி வந்துகொண்டிருந்தபூமி ஒருசிறு கோளினுல் தாக்கப்பட்டு இப்பொழுது தன் அச்சில் 24 டிகிரி அளவுக்குச் சாய்ந்து சுற்றுகிறது என்பதை விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ள னர். சந்திரனின் சுற்றோட்டத்தை வைத்து இதை அவர் கள் கணித்துள்ளனர்.

பூமியை தாக்கிய சிறுகோள் பல நூறு மைல்கள் விட்டமுடையதாக இருந்திருக்கவேண்டும். பசிபிக் படுகையின் மையத்தில் அது பூமியைத் தாக்கியது என்றும் அதன் தாக்கத்தினுல் பூமியின் மேலோடு உடைந்து ஆழத்தின் ஊற்றுக்கண்கள் திறவுண்டது.

மோதிய சிறுகோளின் துண்டுகள் மோதிய வேகத்தில் திரும்பிப் பாய்ந்து ஆகாயவிரிவில் துளைகளை உண்டு பண்ணி நீர்ப்பரப்பில் தாக்கிவிட்டதால் வானத்தின் பல கணிகள் திறவுண்டன (ஆதி 7:11).

"நோவாவுக்கு அறுநூறும் வயதாகும் வருஷம் இரண்டாம் மாதம் பதினேழாம் தேதியாகிய அந் நாளிலே, மகா ஆழத்தின் ஊற்றுக்கண்களெல்லாம் பிளந் தன; வானத்தின் மதகுகளும் திறவுண்டன. நாற்பதுநாள் இரவும் பகலும் பூமியின்மேல் பெருமழை பெய்தது (ஆதி 7:11-12).

ஒரே நாளில் வானத்தின் பலகணிகளும் ஆழத்தின் ஊற்றுக்கண்களும் திறந்தன என்பதைக் கவனியுங்கள். அது ஒரு பெரும் பயங்கர சம்பவமாகும். ஒருவரும் தப்ப முடியாத ஒரு பேராபத்தாக அது இருந்தது என்றாலும் சர்வவல்லதேவன் எட்டுப்பேரைக் காப்பாற்றினார்.'

"பூர்வ உலகத்தைத் தப்ப விடாமல், நீதியைப் பிர சங்கித்தவனாகிய நோவா முதலான எட்டுப்பேரைக் காப் பாற்றி அவபக்தியுள்ளவர்கள் நிறைந்த உலகத்தின்மேல் ஜலப்பிரளயத்தை வரப்பண்ணி" (II பேதுரு 2:5).

நோவாவின் பேழை தேவன் கொடுத்த அளவின் படியே சரியாய் உண்டுபண்ணப்பட்டது. அதன் நீளம் 450 அடி, அகலம் 75 அடி, உயரம் 45 அடி ஆகும். அதன் உயரத்தில் 24 அடி தண்ணீரில் அமிழ்ந்து இருந்தது. இப் படிப்பட்ட ஒரு கப்பல் 100 வருடங்களுக்கு முன்பு வரை கட்டப்படவேயில்லை. அந்தக்கப்பலில் 50,000 மிருகங்கள் மற்றும் பறவைகள் மற்ற உயிர்கள் ஆகியவை இருந்தன. அநேக மனிதர்களைச் சுமந்து செல்லக்கூடியதாயிருந்த அந்தக் கப்பலில் தேவசத்தத்துக்குக் கீழ்ப்படிந்த 8 பேர் மட்டுமே பிரவேசிக்க முடிந்தது அந்தக் கப்பலில் அவர் கள் அடைக்கலம் புகுந்ததினால் காப்பாற்றப்பட்டனர். மற்றவர்களோ தேவ எச்சரிப்புக்குச் செவிக்கொடாமற் போய் அழிந்து போயினர்.

சடுதியாய் ஏற்பட்ட இந்தப் பெருங்கொந்தளிப்பு, அழிவு உலகின் மேற்பரப்பில் பெரும் புவியமைப்பு மாற்றங்களை ஏற்படுத்தின. புதிய மலைத்தொடர்கள் எழும்பின வெப்பமண்டலமாயிருந்த ஆர்க்டிக் பகுதி பனிமூடிய பகுதியாய் மாறிவிட்டது கொந்தளிப்பின் தாக்கம். பெருவெள்ளத்துக்குப்பின் உற்பத்தியாகும் மக்களுக்கென பயன்படக்கூடிய படிவ எரிபொருள்களை உண்டு பண்ணிற்று. உலகின் சுற்றுச் சூழல் மாறிப்போனது. மனிதன் முள்ளுகளையும் குருக்குகளையும் எதிர்த்துப் போராட வேண்டியது மட்டுமின்றி வெள்ளங்கள், புயற்காற்றுகள், நில நடுக்கங்கள், கொள்ளை நோய்கள் மற்றும் தொற்று நோய்கள் ஆகியவற்றையும் எதிர்த்துப் போராட வேண்டியுள்ளது காற்றுமண்டலத்தின் மேல் பரப்பில் புறஊதாக் கதிர்கள் சூரியனிடமிருந்து வந்து புகுந்துள்ளதால் மனிதன் நீண்ட ஆயுள் உள்ளவனாக இருக்கும்படி இனி எதிர்ப்பார்க்க முடியாது அன்று 969 வயதுவரை வாழ்ந்தார் மெத்தூசலா. இன்றோ மனிதனின் ஆயுள் சராசரியாக 70க்கு வந்துவிட்டது.

தேவன் பூர்வ உலகத்தை எதற்காக அழித்தார்? வேத வாக்கியம் கூறுகிறது, ''மனுஷனுடைய அக்கிரமம் பூமியிலே பெருகினது என்றும், அவன் இருதயத்து நினைவுகளின் தோற்றம் எல்லாம் நித்தமும் பொல்லாததே என்றும் கர்த்தர் கண்டார் பூமியானது தேவனுக்கு முன்பாகச் சீர்கெட்டதாக இருந்தது; பூமி கொடுமையினால் நிறைந்திருந்தது தேவன் பூமியைப் பார்த்தார்; இதோ அது சீர்கெட்டதாயிருந்தது; மாம்சமான யாவரும் பூமியின்மேல் தங்கள் வழிகளைக் கெடுத்துக்கொண்டிருந்தார்கள்'' (ஆதி 6:5,11,12)

தேவனால் பொறுத்துக் கொள்ள முடியாத அளவு அக்கிரமம் பூமியிலே பெருகிப்போனதால் ஒரு நியாயத்தீர்ப்பு அவசியமாயிருந்தது. தெய்வீக நீதியினிமித்தம் அது அவசியமாயிற்று. சீர்கேடு அதற்குக் காரணமாயிற்று காலம் வந்தபோது அது சம்பவித்தது.

சுமார் கி.மு 2,345ம் ஆண்டில் பெருவெள்ளம ஏற்பட்டது அதன்பின்பு மூன்று தலைமுறைகளுக்குள் நோவாவின் சந்ததியார் தேவனுடைய வழிகளை விட்டு விலகி விக்கிரகங்களை உண்டு பண்ணி வானராணியையும் மற்றப் பொய்த் தெய்வங்களையும் வணங்கினார்கள். மனிதர் தங்கள் மனதிலும், கிரியைகளிலும், வீணராகி உலகம் சீக்கிரத்திலே வன்முறை, ஒழுக்கக்கேடு, சீர்கேடு மற்றும் அவிசுவாசம் என்னும் பாவங்களால் நிறையப் பட்டது. பெரும் புரட்சிகள், மறுமலர்ச்சிகள், சீர்த்திருத் தங்கள் ஏற்பட்டு அறிவு வளர்ந்தும்கூட மனிதர் தொடர்ந்து வீணராகவே இருந்து இந்தக் கடைசிக் காலத்தில் பொல்லாப்பு, சீர்கேடு, வன்முறை மற்றும் ஒழுக்கக் குலைவு என்பவை அதிகரித்துள்ளதை நாம் காண்கிறோம்.

இரண்டாவது அசைவு!

தேவனாகிய கர்த்தர் இப்போதிருக்கிற இந்த உலகத்தை இன்னும் ஒரு முறை அசைப்பேன் என்று கூறு கிறார் இந்த உலகம் மீண்டும் ஒரு அழிவுக்குள்ளாகச் செல்லும். ஆனாலும் இனி பெருவெள்ளத்தினால் இவ்வுல கம் அழிக்கப்படாது. ஏனெனில் தேவன் நோவாவிடம் கூறியபடியே இனி பூமியானது தண்ணீரினால் அழிக்கப் படாது என்பதற்கு அடையாளமாக வானவில், மழைப் பெய்யும் போதெல்லாம் தோன்றுவதை நாம் காண் கிறோம். அதனால் இம்முறை உலகம் வேறுவிதமாக அழிக் கப்படும். அப்போஸ்தலனாகிய பேதுரு, இப்போதிருக்கிற உலகம் அக்கினியினாலே அழிக்கப்படும் என்று முன்னறி வித்திருக்கிறார் (IIபேதுரு 3:7).

வேதத்தில் இந்த இரண்டாவது அசைவைப்பற்றி அநேக தீர்க்கதரிசன வசனங்கள் உள்ளன. அவைகளை நாம் கவனிப்போம். முதலில் ஏசாயா 13ம் அதிகாரத் தைக் கவனிப்போம் கடைசி நாளாகிய கர்த்தருடைய நாளைக் குறித்து இந்த அதிகாரத்தில் சொல்லப்பட்டுள்

ளது. மகா உபத்திரவத்தில் ஆரம்பித்து மேசியாவாகிய இயேசு இப்பூமியில் அரசாளும் நீதியுள்ள அரசாட்சியில் அந்தநாள் தொடருகின்றது.

''அலறுங்கள், கர்த்தரின் நாள் சமீபமாயிருக்கிறது; அது சர்வவல்லவரிடத்திலிருந்து மகா சங்காரமாய் வரும். ஆதலால் எல்லாக் கைகளும் நெகிழ்ந்து, எல்லா மனுஷரின் இருதயமும் கரைந்துப்போம். அவர்கள் திகிலடைவார்கள்; வேதனைகளும், வாதைகளும் அவர்களைப் பிடிக்கும்; பிள்ளை பெறுகிறவளைப்போல வேதனைப் படுவார்கள்; ஒருவரை ஒருவர் பிரமித்துப்பார்ப்பார்கள்; அவர்கள் முகங்கள் நெருப்பான முகங்களாயிருக்கும்'' (ஏசாயா 13:6-8).

உபத்திரவக்காலத்தைக் குறித்தே இவ்வாக்கியங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

9-ம் வசனம் ''இதோ தேசத்தைப்பாழாக்கி, அதின் பாவிகளை அதிலிருந்து அழிப்பதற்காகக் கர்த்தருடைய நாள் கடூரமும், மூர்க்கமும், உக்கிரகோபமுமாய் வருகிறது.''

இந்த வசனம் கடுமையானதாயிருக்கிறது. பாவிகளை அழிப்பதற்கு என்று சொல்லப்பட்டிருப்பது அவர்களை இப்பூமியில் இல்லாமல் ஆக்குவது என்று பொருள்படும். தேவன் தாம் சிருஷ்டித்த மனிதர்களை ஏன் அழிக்கவேண்டும்? நாம் பரிசுத்தரான நித்திய தேவனுக்கு எதிராக பாவஞ்செய்தோம். நம்முடைய வார்த்தைகளாலும், எண்ணங்களாலும், கிரியைகளாலும் நாம் பாவஞ் செய்தோம் நம்முடைய வாழ்க்கையின் தரம் கெட்டுவிட்டது. நமது ஒழுக்கங்கள் கெட்டுவிட்டது. பேச்சுகள் மாறிவிட்டது. செயல்கள் மாறிவிட்டது. ஞானம் என்று எண்ணி தந்திரத்தை நாம் பயன்படுத்துகிறோம் தூற்றித் திரிதல், வெறுப்பு, ஏமாற்றுதல் என்பவற்றைக்கொண்டு அயலகத்தான் தாக்குதலில் இருந்து துரோகத்திலிருந்து தப்பிக்கொள்ள முயலுகிறோம்.

தேவனுக்கு முன்பாகவும், நம்மைக் காண்கிற யாவருக்கும் முன்பாகவும் தேவபக்தியின் வேஷத்தைத் தரித்து அன்புள்ளவர்கள்போல நடித்து, நீதிமான்கள் போல நம்மைக் காண்பிக்கிறோம். என்ன செய்யவேண்டும் என்று தேவனுக்கே ஆலோசனைச் சொல்ல நாம் தகுதியானவர்கள் என்று எண்ணிக்கொண்டு சுயநலமுள்ளவர்களாகவும் பெருமையுள்ளவர்களாகவும் நடந்துக்கொள்கிறோம். அபக்தியில் மகிழ்ந்து மற்றவர்களும் அப்படிச் செய்யக் கற்றுத் தருகிறோம்.

சட்டத்தை நம் இஷ்டம்போல எடுத்துக்கொள்கிறோம். நமக்கு நாமே பிரமாணங்களை ஏற்படுத்திக் கொள்கிறோம். நன்மையைத் தீமையாகவும் தீமையை நன்மையாகவும் மாற்றுகிறோம். அசுத்தத்தை விரும்பி நீதியைப் பரிகசித்து கொலை, கற்பழிப்பு, பலாத்காரம் என்பவற்றை நாம் செய்கையில் அதைத் தவறாக எடுத்துக் கொள்வதில்லை. நம்மை அமைதலாக வைத்துக்கொள்ள, மதுபானம் போதை மருந்துகள் என்பவற்றை உட்கொள்ள விரும்புகிறோம். மேலே நான் சொன்ன காரியங்களை, பொதுவான சமுதாயத்தைக் குறித்து தான் சொன்னேன். இன்றைய பொதுச் சமுதாயம் இப்படி இருக்கிறது.

மகா உபத்திரவம் என்பது தேவனுடைய நியாயத் தீர்ப்பின் காலம் என்பதை நான் வலியுறுத்த விரும்புகிறேன். இந்தப் பாவச் சந்ததியை நியாயந்தீர்க்கும் காலம் அது. நியாயத் தீர்ப்பைக் குறித்து அதிகம் பிரஸ்தாபிக்க நான் விரும்பவில்லை. ஆனால் தேவனுடைய வசனத்தின்மூலம் தேவன் விடுத்துள்ள எச்சரிப்பை முக்கியப்படுத்தி அறிவித்து மக்களை எச்சரிக்கவே நான் விரும்புகிறேன்.

"அறியாமையுள்ள காலங்களைத் தேவன் காணாதவர் போலிருந்தார்: இப்பொழுதோ மனந்திரும்ப வேண்டுமென்று எங்குமுள்ள மனுஷரெல்லாருக்கும் கட்டளையிடு

கிறார். மேலும் ஒரு நாளைக் குறித்திருக்கிறார்; அதிலே அவர் தாம் நியமித்த மனுஷனைக் கொண்டு, பூலோகத்தை நீதியாய் நியாயந்தீர்ப்பார், அந்த மனுஷனை மரித்தோரிலிருந்து எழுப்பினதினாலே அதின் நிச்சயத்தை எல்லாருக்கும் விளங்கப் பண்ணினார்'' (அப் 17:30-31)

தேவன் எப்படிப்பட்ட தேவன்?

தேவன் உலகத்தை நியாயந்தீர்ப்பார் என்று சொன்னால் பலருக்கு பரியாசமாயிருக்கிறது. ஆனால் நம் வேதப் புத்தகத்தில் அறிவிக்கப்பட்டிருக்கும் சர்வவல்ல தேவனாகிய கர்த்தர் எப்படிப்பட்டவர்? மேகங்களின் மேல் உட்கார்ந்திருக்கிற ஒரு முதியவரா? அல்லது நாம் கெஞ்சிக் கேட்டு பல பொருட்களைப் பெற்றுக்கொள்ளக் கூடிய வகையில் நமக்கு நன்மைகளை அளிக்கும் ஒரு தோன்றி மறையும் தெய்வமா? நாம் கூப்பிடும் போதெல்லாம் வந்து நம்மைப் பிரியப்படுத்தி எல்லாவற்றையும் செய்யும் ஒரு வேலைக்காரரா? நமக்கு ஆதாயம் உண்டாக்குபவரும் நாம் உண்டாக்கும் பிரச்சினைகளைப் பரிகரிக்கும்படி ஏற்பட்டுள்ள எருமையான ஒருவரா? இல்லை, இல்லை, இல்லவேயில்லை. சர்வவல்ல தேவன் பரிசுத்தமான ஒரு தேவன். பேரண்டம் முழுவதையும் கிரமமாகவே அரசாளும் பேரரசர்.

தேவன் நம்மைத் தமக்காகப் படைத்தார். முழு மனுக்குலமும் தேவனை மகிமைப்படுத்தும்படியாகவே படைக்கப்பட்டவர்கள். ஆனால் நீண்ட காலத்திற்கு முன்பாகவே அவருடைய வழிகளைவிட்டு விலகிப் போனோம், நம் சொந்த வழிகளில் சென்று விட்டோம். இன்றும் மனிதன், தன் சொந்த வழிகளைத் தெரிந்துக்கொண்டு அவைகளில் செல்கின்றான். இன்றைய சமுதாயத்தைப் பாருங்கள், நவநாகரீக மனிதனின் நோக்கங்களைப் பாருங்கள். எல்லாம் அப்படியேதான் இருக்கின்றது.

''இயேசு எங்களை ஆளுகை செய்ய நாங்கள் விடமாட்டோம். யார் அந்த தேவன்? நாங்கள் இன்ன

காரியங்களைச் செய்யவேண்டும் என்று எங்களுக்குக் கட்டளையிட அவர் யார்? நாங்கள் மிகவும் முன்னேறி விட்டோம், அதிகம் படித்திருக்கிறோம், அறிவியலில் முன்னேறிவிட்டோம், தொழில் நுட்பத்தில் வளர்ந்து விட்டோம்! எனவே நாங்கள் செய்ய வேண்டியதை அவர் எங்களுக்குச் சொல்ல வேண்டிய அவசியமில்லை. எங்களுக்குரியவைகளை தீர்மானிக்க, எங்கள் வாழ்க்கையையும் எதிர்காலத்தையும் அமைத்துக்கொள்ள எங்களால் முடியும். தேவன் வேண்டாம், வேதாகமம் வேண்டாம், அவைகள் எங்களுக்கு வேண்டவே வேண்டாம்'' என்று சொல்லும் மனிதருடைய எண்ணங்களைத்தான் மேலே நாம் குறிப்பிட்டிருக்கிறோம்

தேவன் இந்த நிலையில் செய்யவேண்டியது என்ன? நம் உலகத்தை உலுக்கியெடுக்கும் அக்கிரமத்தைக் கண்டு கொள்ளாமல் விட்டுவிட வேண்டுமா? போனால் போகட்டும் சின்னப்பிள்ளைகள்தானே, தாங்கள் செய்கிறது இன்னதென்று அவர்களுக்குத் தெரியாது. அதனால் பரவாயில்லை என்று சொல்லி சும்மா இருந்துவிட வேண்டுமா?

தேவன் பரிசுத்தர் என்பதை நாம் உணர்ந்துக்கொள்வோமாக நாம் அவருடைய பரிசுத்தத்தை மோசமாய் அவமதித்திருக்கிறோம். நம்முடைய சிருஷ்டிகராகிய தேவனுக்கு எதிராக நாம் கலகம் பண்ணினோம். நமது அவிசுவாசம், கீழ்ப்படியாமை மற்றும் அவர் சத்தத்தைக் கண்டுக்கொள்ளாமல் இருப்பது என்பன போன்ற காரியங்களால் நாம் தேவனை அவமதித்திருக்கிறோம். தேவனாகிய கர்த்தர் பல கற்பனைகளைத் தந்திருக்கிறார். அவைகளில் முதலிரண்டு கற்பனைகள்.

''உன்னை அடிமைத்தன வீடாகிய எகிப்து தேசத்திலிருந்து புறப்படப்பண்ணின உன் தேவனாகிய கர்த்தர் நானே.

என்னையன்றி 'உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்க வேண்டாம்.

மேலே வானத்திலும், கீழே பூமியிலும், பூமியின் கீழ்த் தண்ணீரிலும் உண்டாயிருக்கிறவைகளுக்கு ஒப்பான ஒரு விக்கிரகத்தையாகிலும் யாதொரு விக்கிரகத்தையாகிலும் நீ உனக்கு உண்டாக்கவேண்டாம்.

நீ அவைகளை நமஸ்கரிக்கவும் சேவிக்கவும் வேண்டாம்; உன் தேவனாகிய கர்த்தராயிருக்கிற நான் எரிச்சலுள்ள தேவனாயிருக்கிறேன்'' (யாத் 20:2-5).

இஸ்ரவேலின் தேவன் விதித்த இந்தக் கற்பனைகளைப் பற்றி நாம் என்ன எண்ணுகிறோம்? என்ன செய்கிறோம்? நாம் நமக்குப் பல விக்கிரங்களை உண்டு பண்ணி வைத்திருக்கிறோம். நம் சுய விருப்பங்கள், குறிக்கோள்கள், பண ஆசை, வியாபாரம், வீடு, குடும்பம், விளையாட்டு, பொழுதுபோக்கு, பாலுறவு, சிற்றின்பம் மற்றும் சுயம் ஆகிய விக்கிரங்களை வைத்திருக்கிறோம் அதாவது, தேவனுக்கு கொடுப்பதைவிட அதிக முக்கியத்தை இவைகளுக்குக் கொடுத்து விடுகிறோம்

முழு உலகத்தையும் சாத்தானுடைய காலடியில் கொண்டு வரப்பண்ணவேண்டுமென்ற சாத்தானின் திட்டத்தில் உலகமுழுவதும் சிக்கியிருக்கின்றது சமுதாயத்தில் நாம் காண்கிற காரியங்கள் தற்செயலாக சம்பவிப்பவையல்ல. பூமியின் மேல் விசுவாசத்தை அழித்துப் போடும் வேலையில் ஈடுபட்டிருக்கிறான். நாம் தேவனாகிய கர்த்தரை விசுவாசிப்பதை அவன் விரும்புகிறதில்லை

சமுதாயத்தில் பெருகிவரும் குற்றங்களும் பலாத்காரங்களும் தற்செயலாய் ஏற்படுபவையல்ல. இளைய சமுதாயத்தை ஆட்கொண்டிருக்கும் போதைப்பழக்கம் தற்செயலாக உண்டானதல்ல. உலக முழுவதிலும் செயல்படும் மாஃபியா என்ற குற்றவாளிக் கும்பல்தான் அதற்குக் காரணம்.

மதுபானம் பண்ணுதலும் பெருகிவருகிறது. ஒழுக்கம் சீர்குலைகிறது. இவைகளும் தற்செயலானவைகள் அல்ல.

பாலுறவு, பாலுறவுப் பழக்கவழக்கங்கள் தொற்றுநோய் போலப் பரவிவருகிறது. இதற்குக் காரணம் ஒளிரூட்டக் காரர்களின் சதித்திட்டமேயாகும். ரோமப்பேரரசின் காலமுதற்கொண்டு மிகச் சீர்கெட்ட பொழுதுபோக்குகள் இப்போது ஏற்பட்டுள்ளன தரங்கெட்ட திரைப்படங் கள் மட்டுமல்ல பொழுது போக்குக்காகக் கொலைகளும் கூட படம்பிடிக்கப்பட்டுக் காட்டப்படுகின்றன.

உதாரணமாக 1975ம் ஆண்டுவாக்கில் ஒரு படம் பிடிக்கப்பட்டது. அதில் ஒரு நடிகை பாலுறவுக் காட்சி களில் நடித்து முடித்த பின்பு படக்கருவிகள் படமெடுத்துக் கொண்டிருக்கும்போதே துண்டு துண்டாக ஒவ்வொரு அவயமாக துண்டிக்கப்பட்டுக் கொலை செய்யப்பட்டாள். கொடூரமானக் காட்சியைப் பார்க்க விரும்புபவர்களுக்காக இந்தப் படம் உருவாக்கப்பட்டது பார்க்கிறவர்கள் அதற்கு அதிகப் பணம் கொடுக்கவேண்டும் ரோமர் ஆட்சிக்காலத்தில் கிறிஸ்தவர்களை அரங்கத்தில் போட்டு அதிலே சிங்கங்களை அனுப்புவார்கள். பட்டினியோடிருக் கும் சிங்கங்கள் அந்த அப்பாவி மனிதர்களைக் கடித்துக் குதறி பிய்த்துச் சாப்பிடுவதை அரங்கசாலையின் மேல் அமர்ந்திருக்கும் பார்வையாளர்கள் கண்டு கைகொட்டிச் சிரித்து இரசிப்பார்கள் என்ன மிருகத்தனமான ஒரு காரியம்? அதுபோல இப்பொழுதும் நடக்க ஆரம்பித்து விட்டது தேவவசனத்தை நேசிக்கிறவர்கள் சொற்பமாகி விட்டனர். நீதியையும் ஒழுக்கத்தையும் நேசிப்பவர்கள் குறைந்து போய்விட்டனர்.

இன்று நடப்பதைப் பாருங்கள்!

மேலே கண்ட நடிகையின் கொடூரக் கொலை உங்களை அதிர்ச்சி அடையச் செய்யுமானால் அருமை வாசகரே ஒவ் வொரு வருடமும் 5 கோடி குழந்தைகள் தங்கள் தாயின் வயிற்றிலேயே கொடூரமானவகையில் கொல்லப்படுகிற தைக் குறித்து என்ன சொல்கிறீர்கள். அந்தக் குழந்தை-

கள் சத்தமிடத்துவங்குமுன்பே கொல்லப்படுகின்றன கருவிலிருக்கும் தங்கள் குழந்தைகளைக் கலைப்பது தாய்மார்களின் இஷ்டம் என்று இன்றைய நவநாகரீக மனிதர்கள் கூறிக்கொண்டிருக்கின்றனர். கருவைக்கலைத்துக்கொள்ள சட்டம் அனுமதிப்பதைப் போல அனுமதித்தால் இன்றைக்கு அநேகர் தம் பெற்றோரையும் தம் அயலகத்தாரையும் கொன்றுபோடுவார்கள் என்பதில் சந்தேகம் ஏதுமில்லை. இப்பொழுதே இந்தியாவில் ஒரு வருடத்திற்கு 30, 000 பேரும் அமெரிக்காவில் வருடத்திற்கு 25, 000 பேரும் கொல்லப்படுகிறார்கள் அப்படியானால் தேவன் செய்யவேண்டியது என்ன? தேவன் உலகத்தை நியாயந்தீர்க்க வேண்டும் என்றுதான் அதற்கு பதில் சொல்ல முடியும். அவர் நிச்சயமாகவே தாம் நியமித்த மனிதனைக் கொண்டு நீதியாக இவ்வுலகத்தை நியாயந்தீர்ப்பார். அந்த மனுஷனை மரித்தோரிலிருந்து எழுப்பியதால் அதின் நிச்சயத்தை எல்லாருக்கும் விளங்கப்பண்ணியிருக்கிறார். அந்த மனுஷன் கர்த்தராகிய இயேசுவே (அப் 17:31) அதற்கான நாள் குறிக்கப்பட்டு விட்டது.

தேவன் இப்பூமியிலிருக்கும் பாவிகளை இல்லாமல் ஆக்கப்போகிறார் இந்தப் பூமியை மேசியா நீதியுடன் ஆளுகை செய்ய இது அவசியம். பரமபிதாவானவரின் நியாயங்களும் வழிகளும் புறக்கணிக்கப்படும் உலகத்தை அவர் அப்படியே ஆளுகை செய்ய முடியாது. இவ்வுலகத்தை அழிக்கும் தீமைகளிலிருந்து அதை அவர் முதலாவது சுத்திகரிக்க வேண்டும், கலகத்தையும் ஒழிக்க வேண்டும். ஏசாயாவின் புத்தகத்தில் தேவன் கூறுகிறார்.

"பாவத்தினிமித்தம் உலகத்தையும், அக்கிரமத்தினிமித்தம் துன்மார்க்கரையும் நான் தண்டித்து, அகங்காரரின் பெருமையை ஒழியப்பண்ணி, கொடியரின் இடும்பைத் தாழ்த்துவேன். புருஷனைப் பசும் பொன்னிலும், மனுஷனை ஓப்பீரின் தங்கத்திலும் அபூர்வமாக்குவேன். இதினிமித்தம் சேனைகளின் கர்த்தருடைய உக்கிரத்தினால்

அவருடைய கடுங்கோபத்தின் நாளிலே பூமி தன்னிடத்தை விட்டு நீங்கும்படி வானத்தை அதிரப்பண்ணுவேன்''
(ஏசாயா 13:11-13)

அடிக்கடி பலர் என்னிடம் உபத்திரவகாலத்தில் குழந்தைகளின் கதி என்ன? அவர்களும் ஏன் துன்பப்பட வேண்டும்? என்று கேட்பதுண்டு. மனிதர்களின் பாவத்தி னிமித்தம் குழந்தைகளும் எப்பொழுதும் துன்பப்படுகின்றன இயற்கையான நாசங்களிலும் அப்படியே, மனிதன் உண்டுபண்ணும் நாசங்களிலும் அப்படியே. குழந்தைகளுக்கு வரும் துன்பம் குறித்து 16ம் வசனத்தில் எழுதப்பட்டுள்ளது.

ஹிரோஷிமாவின் அழிவிலே அணுகுண்டுக்குக் குழந்தைகளும்தான் இரையாயினர். கி.பி. 70ல் தீத்து இராயனால் எருசலேம் அழிக்கப்பட்டபோது எருசலேமின் அலங்கங்களிலிருந்தும் வீடுகளின் உச்சிகளிலிருந்தும் பச்சிளம் பாலகர்கள் தெருக்களில் வீசியெறியப்பட்டனர். அப்பொழுது மாண்டதான பத்துலட்சம் மக்களில் பதினாயிரங்களான குழந்தைகளும் அடங்குவர்.

நோவா கால ஜலப்பிரளயத்திலும்கூட பூமியின் மீதிருந்த எல்லாக் குழந்தைகளும் மாண்டுபோயினர். தேவன் ஏன் இவைகளையெல்லாம் அனுமதித்தார்? ஜாதிகளின் அக்கிரமங்களினிமித்தமே.

டைம் பத்திரிக்கை 11.1.82 இதழில் 23 பக்கக் கட்டுரை ஒன்றை வெளியிட்டிருந்தது. அதன் தலைப்பு ''யுத்தங்களின் பிள்ளைகள்'' என்பதாகும். அயர்லாந்திலும் இஸ்ரேலிலும், லெபனானிலும், கம்போடியாவிலும், வியட்நாமிலும் பிள்ளைகளைப் பாதிக்கும் துயரங்களைக் குறித்து எழுதப்பட்டிருந்தது.

ஓர் இஸ்ரேலிய சிறுபெண் எழுதிய கவிதை அதில் இடம் பெற்றது. அநேகருடைய உணர்வுகளையும் பிரதிபலிப்பதாயிருந்த அந்தப் பாடல் இதுதான்:

தேவன் உண்டு என்று அநேகர் சொல்லுகின்றனர்
அப்படி தேவன் ஒருவர் உண்டு என்றால்
சிறு பிள்ளைகள் ஏன் கொல்லப்படுகிறார்கள்?
இப்படி ஏன் சம்பவிக்க வேண்டும்?

இதைப் படிக்கையில் அழுகை வருகிறதில்லையா? இந்தக் குழந்தையின் கேள்வி அடிக்கடி கேட்கப்படும் கேள்வியாகும். பெற்றோரின் பாவங்களின் காரணமாகவே குழந்தைகள் துன்பப்படுகிறார்கள். வெகு காலத்துக்கு முன்பே தேவன் கூறினார்.

"கர்த்தர் இரக்கமும் கிருபையும் நீடிய சாந்தமும் மகா தயையும், சத்தியமுமுள்ள தேவன். ஆயிரம் தலைமுறைகளுக்கு இரக்கத்தைக் காக்கிறவர். அக்கிரமத்தையும் மீறுதலையும் பாவத்தையும் மன்னிக்கிறவர்; குற்றவாளியைக் குற்றமற்றவனாக விடாமல் பிதாக்கள் செய்த அக்கிரமத்தைப் பிள்ளைகளிடத்திலும், பிள்ளைகளுடைய பிள்ளைகளிடத்திலும் மூன்றாம் நான்காம் தலைமுறை மட்டும் விசாரிக்கிறவர்" (யாத் 34:6,7).

பெற்றோருடைய பாவங்களினிமித்தம் பிள்ளைகள் துன்பப்படுவது தவறானதாகத் தோன்றினாலும், ஒரு மனிதனுடைய தீமைகளுக்கு இயற்கையாகவே பின் விளைவுகள் ஏற்படுகின்றன. உங்கள் பிள்ளைகளையும் பேரப்பிள்ளைகளையும் மிகுந்த துன்பத்துக்குத் தப்புவிக்க விரும்பினால் இப்பொழுதுதானே உங்கள் வாழ்க்கையில் இருக்கக்கூடிய எந்தத் தீமையிலிருந்தும் மனந்திரும்பவேண்டும்.

பாவம் கொடிய பின் விளைவுகளை உண்டுபண்ணக் கூடியது என்ற விஷயத்தை நான் உங்களுக்கு வலியுறுத்த விரும்புகிறேன். பாவத்திலும் அதின் பின் விளைவுகளின் கோரப்பிடியிலும் நாம் அகப்படாத வரை அதை நாம் லேசாக எடுத்துக் கொள்கிறோம். நம் சொந்த வாழ்வில் பாதிக்கப்படாத வரைப் பாவத்தைக் கண்டு கொள்ளாமல் விட்டுவிடுகிறோம். எல்லாரும் செய்கிறதுதானே

என்று அலட்சியமாய் இருந்துவிடுகிறோம். தேவனும் கூட பாவத்தைக் கண்டு கொள்ளாமல் இருந்துவிட வேண்டும் என்று எதிர்பார்க்கிறோம்.

நாம் நமக்கு எதிராகவும், நமது குடும்பத்துக்கு எதிராகவும், நமது அயலகத்தாருக்கு எதிராகவும், நம் நாட்டுக்கு எதிராகவும் மட்டும் அன்றி தீமையை வெறுக்கும் பரிசுத்த தெய்வத்துக்கு எதிராகவும் நாம் பாவஞ்செய்திருக்கிறோம். எல்லாப் பாவங்களுமே தேவனுக்கு எதிரான மோசமான பாவங்களே. பாவத்தினுல் நஷ்டமுண்டாவது மட்டுமல்ல நம்முடைய பாவங்கள் மற்றவர்களையும் பாதிக்கின்றது என்ற உண்மை துக்ககரமானது ஆகும். மற்றவர்கள் ஏதாவது ஒரு விதத்தில் பாதிக்கப்படாமல் நீங்கள் ஒரு போதும் பாவஞ்செய்ய முடியாது ஒவ்வொரு பாவமும் உங்களையே அழிக்கக்கூடியது மட்டுமல்ல உங்களுடன் இடைபடும் மற்றவர்களையும் அழிக்கக்கூடியது தகப்பன் ஒரு குடிகாரனுயிருந்தால் அதனுல் பிள்ளைகள் எந்த விதத்திலும் பாதிக்கப்படமாட்டார்கள் என்றே, போதை மருந்துகளுக்கு அடிமைப்பட்டுள்ள ஒரு வாலிபனுல் மற்றவர்களுக்குப் பாதிப்பு ஏற்படாது என்றே எண்ணுகிறீர்களா? அப்படியானுல் நீங்கள் நினைப்பது தவறு. மற்றவர்களுக்கும் பாதிப்பு ஏற்படுகிறது. நாம் செய்கிற காரியம் நல்லதோ கெட்டதோ எதுவானுலும் அது மற்றவர்களையும் பாதிக்கிறது. கடந்த பல தலைமுறையினரால் குவிந்துள்ள பாவங்களினுல்தான் இன்று குழந்தைகள் பாதிக்கப்படுகின்றனர்.

பூமி பிளந்து போகும்!

இன்னும் ஒருதரம் வானத்தையும் பூமியையும் நான் அசையப்பண்ணுவேன் என்று சர்வ வல்ல தேவன் சொல்லுகிறுர் வானம் குலுங்கி பூமி தன்னிடத்தை விட்டு அசைக்கப்படும். சூரியனும் அந்தகாரப்படும்

இதே காரியத்தைக் குறித்து அதிர்ச்சியூட்டும் ஒரு தீர்க்கதரிசனம் ஏசாயா 24-ம் அதிகாரத்தில் கூறப்பட்டுள்ளது கர்த்தருடைய நாளாகிய மகா உபத்திரவக் காலம் குறித்தே அங்கு குறிப்பிட்டுள்ளது.

"அப்பொழுது திகிலின் சத்தத்திற்கு விலகி ஓடுகிறவன் படுகுழியில் விழுவான்; படுகுழியிலிருந்து ஏறுகிறவன் கண்ணியில் அகப்படுவான்; உயர இருக்கும் மதகுகள் திறவுண்டு, பூமியின் அஸ்திபாரங்கள் குலுங்கும். தேசம் நொறுங்கவே நொறுங்கும். தேசம் முறியவே முறியும், தேசம் அசையவே அசையும் வெறித்தவனைப்போல தேசம் தள்ளாடி, ஒரு குடிலைப்போலப் பெயர்த்துப்போடப்படும்; அதின் பாதகம் அதின் மேல் பாரமாயிருக்கையால் அது விழுந்துபோம் இனி எழுந்திராது" (ஏசா 24:18-20).

"சேனைகளின் கர்த்தர் சீயோன் மலையிலும் எருசலேமிலும் ஆளுகை செய்வதால், சந்திரன் கலங்கும், சூரியன் நாணமடையும்; அவருடைய மூப்பர்களுக்கு முன்பாக மகிமை உண்டாயிருக்கும்" (23-ம் வசனம்).

முதலில் பேரழிவு உண்டாகும் பின்போ மேசியாவின் மகிமையான ஆளுகை உண்டாகும். வானமும் பூமியும் அசைக்கப்படுவது குறித்தும் மேசியா திரும்பவருவது குறித்தும் ஆகாயின் புத்தகத்தில் இதற்கிணையான ஒரு தீர்க்கதரிசனம் காணப்படுகிறது.

"சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்: இன்னும் கொஞ்சக்காலத்துக்குள்ளே இன்னும் ஒரு தரம் நான் வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் வெட்டாந்தரையையும் அசையப் பண்ணுவேன்" (ஆகாய் 2:6)

'சகல ஜாதிகளையும் அசையப்பண்ணுவேன், சகல ஜாதிகளாலும் விரும்பப்பட்டவர் வருவார், இந்த ஆலயத்தை மகிமையினால் நிறையப் பண்ணுவேன் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்" (2:7).

மேசியா இயேசுவருவார் அவருடைய மகிமை தேவ னுடைய வீட்டையும் முழு உலகத்தையும் நிரப்பும். உலகத் தலைநகரமாகிய எருசலேமிலிருந்து அவர் ஆளுகை செய்வார்.

பூமியதிர்ச்சிகள் அதிகரிக்கின்றன!

பூமி இரண்டாக உடைந்து போவதை உங்களால் கற்பனைசெய்து பார்க்க முடியுமா? 1.9.75 டைம் பத்தி ரிக்கையில் "நில நடுக்கம்" என்ற பெயரில் வெளிவந்த கட்டுரையில் கலிபோர்னியாவில் ஒரு நிலநடுக்கம் கடைசி யாக ஏற்படும் என்று நிபுணர்கள் முன்னறிவித்த செய்தி வெளியாகியிருந்தது. அவர்கள் குறிப்பிட்ட சமயம் ஏற் கனவே கடந்துவிட்டது பூமி அதிர்ச்சி உண்டாகும் நேரம், இடம் மற்றும் அதன் அளவு ஆகியவற்றைக் கணிப்பதில் ஓரளவு வெற்றியை நிபுணர்கள் அடைகிறார் கள் என்றும் அது கூறியது.

நிலநடுக்கம் கடந்த காலங்களிலேயும் சம்பவித் துள்ளன. எனவே அது புதிய விஷயமல்ல. உசியா ராஜா கர்த்தரைவிட்டு விலகி அருவருப்பானவைகளைச் செய்த போது பூமியதிர்ச்சி உண்டானது (சகரி 14:6). அதுபோல பல பெரும் பூமியதிர்ச்சிகள் கடந்த காலங்களில் சம்பவித் துள்ளன.

வரலாறு எழுதப்பட்டது முதல் இதுவரை நிலநடுக்கங் களினாலும் அதனால் ஏற்படும் பெருவெள்ளங்கள் நெருப்பு கள் மற்றும் நிலச்சரிவுகள் ஆகியவற்றால் ஏறக்குறைய ஏழு கோடியே 40 லட்சம்பேர் மாண்டிருப்பதாக மதிப்பிடப் பட்டுள்ளது. அதிகமாக மனித உயிர்கள் சேதமடைந்த நிலநடுக்கங்கள் சீனாவில் ஏற்பட்டுள்ளன 1556ல் ஷென்றி மாநிலத்தில் ஏற்பட்ட சுமார் 8.2 ரிச்டர் நிலநடுக்கத்தில் 8 இலட்சத்து 30 ஆயிரம் பேரும் 1976ல் ஹொபேய் மாநிலத்தில் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் 6 இலட்சத்து 55 ஆயிரம் பேரும் மாண்டனர். காயமடைந்தவர்களின்

தொகை ஏழு இலட்சத்து எழுபத்தொன்பதாயிரமாகும். பூமியைத் தாக்கும் நில நடுக்கங்களில் 80 சதவீதம் பசிபிக் நெருப்பு வளையத்தில் ஏற்படுகின்றது. இந்த வளையம் பசிபிக் பெருங்கடலின் விளிம்பில் அமைந்துள்ளது. இப் பகுதியில் 1964 ஆம் ஆண்டு அலாஸ்காவின் 25 ஆயிரம் சதுரமைல் பரப்பில் ஏற்பட்ட பெரும் நிலநடுக்கம் கோடிக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள சேதத்தை ஏற்படுத்தியது. ஆனால் அங்குள்ள சொற்பமான மக்கள் தொகையினால் 114பேர் மட்டுமே அதில் மாண்டனர்.

மத்தியத் தரைக்கடல் பகுதியும் அதன்கிழக்கே ஆசியா நெடுகிலும் உள்ள நாடுகளும் புனிதநாடும் 15 சதவீத நிலநடுக்கங்களினால் பாதிக்கப்படுகிறது. மீதயுள்ள 5 சதவீத பூமியதிர்ச்சி உலகின் எஞ்சியுள்ள பகுதிகளில் சம்பவிக்கின்றது.

நிலநடுக்கத்தை அளக்க ரிச்டர் அளவுகோலைப் பயன் படுத்துகின்றனர். 1 முதல் 10 வரையிலான எண்கள் பூமியதிர்ச்சிகளின் கடுமையை அளக்கப் பயன்படுகின்றன. ரிச்டர் 1 முதல் 3 வரை சாதாரண நிலநடுக்கங்களாகும். 4க்கு மேல் கடுமையானவையாகும். ஒவ்வொரு எண் அளவும் அதற்கு முந்தியதைக் காட்டிலும் 10 மடங்கு அதிகக் கடுமையானதாகும். உதாரணமாக ரிச்டர் 1 ஐப் போல ரிச்டர் 2,100 மடங்கு கடுமையானதாகும். ரிச்டர் 9 அளவுக்கு நிலநடுக்கம் உண்டாகுமானல் அது 100 கோடி மடங்கு கடுமையானதாகும். அவ்வளவு கடுமையான நிலநடுக்கங்களும் உண்டானதுண்டு 1908ல் இத்தாலியிலுள்ள மெஸினாவில் ஏற்பட்ட நில நடுக்கத்தில் ஒரு லட்சம் பேர் மரித்து அந்த நகரமே மண்மேடாய்ப் போய்விட்டது.

நிலநடுக்கத்தால் ஏற்படக்கூடிய அழிவானது, அந்த இடத்தின் அமைப்பு, மக்கள் நெருக்கம், மற்ற சில விசேஷ அம்சங்களான உறுதியற்ற கட்டடங்கள் மலைப்பாறைச் சரிவு ஆகியவற்றை அடிப்படையாகக்கொண்டு அமைகிறது. சீனவில் 1976ல் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் வெளிப்

பட்டதான ஆற்றல் 10 ஆயிரம் ஹிரோஷிமா குண்டுகளின் ஆற்றலுக்குச் சமம். அப்பகுதியிலிருந்த தொழில் நகரமான டாங்ஷனில் 80 சதவீதம் தரைமட்டமானது. இந்த யுகமுடிவில் பூமியதிர்ச்சிகள் பெருகும் என்று வேதவாக்கியம் எச்சரிக்கின்றது. தேவனுடைய ராஜ்யத்தை பூமியிலே நிறுவுவதற்கான பிரசவ வேதனையே இந்தப் பேராபத்துகள் என்று சொல்லலாம்

புள்ளிவிவரக் கணக்கின்படி 15ம் நூற்றாண்டில் 159 நில நடுக்கங்களும் 16ஆம் நூற்றாண்டில் 153 நிலநடுக்கங்களும் 17ம் நூற்றாண்டில் 378 நில நடுக்கங்களும் 18ம் நூற்றாண்டில் 540 நிலநடுக்கங்களும் 19ஆம் நூற்றாண்டில் 2119 நிலநடுக்கங்களும் ஏற்பட்டுள்ளன. இந்த 20ம் நூற்றாண்டு முடிவில் இதைவிட மிக அதிக எண்ணிக்கையில் நிலநடுக்கங்கள் ஏற்பட்டுள்ளது தெரியவரும்.

விஞ்ஞானமுறையில் நில அதிர்வுகளைப் பதிவு செய்யும் வசதி முன்னேறி உள்ளதால் எண்ணிக்கை அதிகரிக்கிறது என்பது ஓரளவு உண்மை என்றாலும் உண்மையில் காலம் செல்லச்செல்ல நிலநடுக்கங்களின் எண்ணிக்கையும் கடுமையும் அதிகரிக்கின்றன என்ற உண்மையை மறுக்க இயலாது. வரலாற்றில் சம்பவித்துள்ள 13 மிகப்பெரிய பூமியதிர்ச்சிகளில் 10 இந்த 20 ஆம் நூற்றாண்டில் சம்பவித்துள்ளது இதற்கு நல்ல சான்றாகும். குறிப்பாக இஸ்ரவேல் நாடு மறுஉதயமானதும் விசுவாச அதோடு உலக சபைச் சங்கம் அமைக்கப்பட்டதுமான 1958 ஆம் ஆண்டு முதல் நில அதிர்வின் எண்ணிக்கை அதிகரித்திருப்பது கண்டறியப்பட்டுள்ளது. உலகில் ஏற்பட்ட பெரும் பூமியதிர்ச்சிகளில் சிலவற்றை அடுத்தபக்கம் பட்டியலிட்டுக் காட்டியுள்ளோம். சம்பவித்த ஆண்டு, அதன் கடுமை மற்றும் சேதம் ஆகியவை தரப்பட்டுள்ளது. கடுமையான அதிர்ச்சிகளில் பெரும்பாலானவை அதிக உயிர்ச்சேதம் ஏற்படுத்தவில்லை. 1964ல் அலாஸ்காவில் ஏற்பட்ட 8.4 ரிக்டர் நில அதிர்வில் 114 பேர்கள் மட்டுமே மாண்டனர். இப்படியாக அநேக பெரும்

அதிர்வுகளில் சொற்ப உயிர்ச்சேதம் மட்டுமே ஏற்பட்டது. இந்நூற்றுண்டு ஆரம்பத்தில் ஒவ்வொரு இரண்டு அல்லது மூன்று ஆண்டுக்கு ஒரு முறை ஒரு பெரிய நில நடுக்கம் சராசரியாக ஏற்பட்டது இப்பொழுதோ, ஒவ்வொரு ஆண்டும் 100 பெரிய நில அதிர்வுகள்வரை ஏற்படுகின்றன அவைகளில் பல மக்கள் வாழும் பகுதிகளில் தாக்காதபடியால் செய்திப் பத்திரிக்கையில் வெளிவருவதில்லை.

வரலாற்றில் இடம்பெற்ற மோசமான பூமியதிர்ச்சிகள்

வருடம்	இடம்	ரிச்டர் அளவு எண்	மாண்டவர்கள்
856	கொரிந்து, கிரீஸ்		45,000
1556	ஷென்ஸி, சீனா		8 30,000
1737	கல்கத்தா இந்தியா		3,00,000
1755	லிஸ்பன் போர்ச்சுகல்		60,000
1883	டச் இன்டீஸ் (இந்தோனீஷியா)		36,000
1902	மார்டினிக் (ஐரோப்பா)		10,000
1906	சான்பிரான்சிஸ்கோ, அமெரிக்கா	8.3	700
1908	மெஸ்ஸினா, இதாலி	9.0	1,00,000
1915	இத்தாலி		29,000
1920	சீனா		1 80,000
1922	ஜப்பான்	7.9	1,43,000
1927	சீனா		2,00,000
1932	சீனா		70,000
1933	ஜப்பான்	8.1	3,064
1934	இந்தியா		10,000
1935	இந்தியா	7.6	30,000
19 9	சிலி		30,000
1939	துருக்கி		23,000

1944	ஜப்பான்	7.9.........1 000
1946	ஜப்பான்	8 0.........1,330
1948	ஜப்பான்	7 1.........3,796
1949	ஈக்வெடார்	6,000
1960	சிலி	....5.700
1960	மொராக்கோ	12,000
1962	ஈரான்	 10,000
1964	அலாஸ்கா	8 4 114
1968	ஈரான்	11,500
1970	பெரு	66,700
1972	ஈரான்	7 9.........5,000
1972	நிகராகுவா	10,000
1974	பாகிஸ்தான்	5,200
1976	குவாடிமாலா	23,000
1976	சீனா	7,50,000
1976	பிலிப்பீன்ஸ்	3,300
1976	துருக்கி	 3,700
1978	ஈரான்	25,000
1980	அல்ஜீரியா	7 5.......20,000
1980	இத்தாலி	6.8.........3.000
1987	ஜப்பான்	6.6.......60.000 (வீடுகள்)
1993	ஜப்பான்	7 8...........260
1993	இந்தியா	6 4.......30,000

பழங்கால ஜப்பானியர்களின் மூட நம்பிக்கை என்னவென்றால், பூமியைத்தன் முதுகின்மேல் சுமக்கும் இராட்சத சிலந்தியின் திடீர் அசைவினால்தான் நிலநடுக்கம் உண்டாகிறது. வேறு சிலரோ தேவனுடைய கோபாக்கினைதான் பூமியதிர்ச்சி என்றார்கள். நவீன விஞ்ஞானமோ நிலநடுக்கம் ஏற்பட பல காரணங்களைக் கூறுகின்றனர் பூமியில் உள்ள பல நிலமேடைகள் அல்லது படுகைகள் நகர்ந்து கொண்டிருப்பதால் ஏற்படும் அழுத்தம் காரணமாகவே பூமி அதிர்ச்சி உண்டாகிறது என்ற கருத்து

பெரும்பாலும் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. பூமியில் 10 பெரிய நில மேடைகளும் பல சிறு நிலமேடைகளும் உள்ளன. அவைகளின் கனம் 10 மைல் ஆகும். கண்டங்கள் வருடத்திற்கு சில சென்டிமீட்டர்கள் என்ற கணக்கில் நகருகின்றன நகரும் நிலமேடைகள் சிலசமயம் சிக்கிக் கொண்டு அங்கு பெரிய அழுத்தமும் இறுக்கமும் உண்டாகின்றன. அவை திடீரென்று மீண்டும் பிரியும்போது ஏற்படும் சேமிப்பு ஆற்றல் திடீரென்று வெளியாகி பூமிய திர்ச்சிகள் ஏற்படுகின்றன.

உதாரணமாக ஜப்பானுக்கு அப்பால் பசிபிக் நில மேடை யூரேஷியன் நிலமேடைக்கு அடியில் நகருகிறது. இதனால் ஜப்பான் தீவுக் கூட்டங்களில் அடிக்கடி நில நடுக்கம் உண்டாகிறது கலிபோர்னியாவில் செயின்ட் ஆன்ட்ரூ பிளவிற்கு அருகே இரண்டு நிலமேடைகள் ஒன்றையொன்று கடந்து செல்கின்றன. பசிபிக் நில மேடையில் அமைந்துள்ள கலிபோர்னியா துண்டு வட மேற்கு திசையில் நகருகிறது இந்த மாநிலத்தின் எஞ்சிய பகுதிகள் வட அமெரிக்க மேடையில் அமைந்துள்ளதால் மேற்கு நோக்கி நகருகின்றது இப்படி நகர்ந்த மேடைகள் சிக்குண்டு பின்பு திடீரென்று நகர்ந்ததால்தான் 1906ல் சான்பிரான்சிஸ்கோவில் பெரும் நில அதிர்வு ஏற்பட்டது என நம்புகின்றனர்.

சான் ஆன்டிரியாஸ் பிளவில் இரு பகுதிகள் உள்ளன. ஒரு பகுதி லாஸ் ஏஞ்சல்ஸ் நகரத்துக்கு அருகில் உள்ளது. இது நகரவில்லை. ஆனல் சான் பிரான்ஸிஸ்கோ நகருக்கு அருகில் உள்ள இன்னுமொரு பகுதி நகருகின்றது வெகு சீக்கிரம் நகரும் மேடைகள் சிக்கி பின்பு பிரியும். அப்பொழுது 7 முதல் 8 ரிச்டர் வரையுள்ள நில நடுக்கம் ஏற்படக்கூடும் என்றும் அதில் 10 ஆயிரம் பேர் வரை மரித்து 3 இலட்சம் பேர் வரை காயப்படுவார்கள் என்றும் கணிக்கப்பட்டுள்ளது. 15 விநாடிகளில் எல்லாம் முடிந்துவிடும்.

சான் ஆன்டிரியாஸ் பிளவில் குடியிருக்கும் கலிபோர்னியர்கள் சீக்கிரம் தங்கள் பகுதியில் நிலநடுக்கம் ஏற்பட

இருப்பதாய் இருந்தும் இன்னும் வானுயரக் கட்டடங்களைக் கட்டிக்கொண்டுதான் இருக்கின்றனர் என்று 8-1-80 தேதியிட்ட நியூஸ்வீக் பத்திரிகையில் செய்தி வெளியானது.

தேவன் அனுப்பும் நடுக்கங்கள்!

நிலநடுக்கம் ஏற்படுவதற்கு விஞ்ஞானப் பூர்வமான காரணங்களைக் கூறிக்கொண்டிருந்தாலும் "சகலத்தையும் தம்முடைய வல்லமையுள்ள வார்த்தையால் தேவன் தாங்கிக்கொண்டிருக்கிறார்" (எபி 1:3). அவருடைய அனுமதி இல்லாமல் எதுவும் நடக்க முடியாததாகையால் சில நேரங்களில் தேவனுடைய நியாயத்தீர்ப்பாகவும் சில நேரங்களில் அவருடைய எச்சரிப்பாகவும் நிலநடுக்கங்கள் ஏற்படுகின்றன.

1750ல் லண்டனில் பிஷப்பாயிருந்த தாமஸ் ஷெர்லாக், "சமீபத்தில் ஏற்பட்ட இரண்டு நில நடுக்கங்களும் லண்டன் பட்டண மக்கள் தங்கள் பாவத்திற்கு நிவிர்த்தி செய்ய வேண்டும் என்று எச்சரிப்பதற்காகவே ஏற்பட்டன" என்று எழுதினார்.

ஜான் வெஸ்லி 1777ல் எழுதிய கடிதத்தில், "ஒரு பூமி அதிர்ச்சியைப்போல மக்களை உணர்த்தக்கூடிய தேவ தண்டனை வேறு எதுவும் இல்லை" என்று எழுதினார். ஜனங்கள் பூமியதிர்ச்சிகளை அற்பமாய் எண்ணுமல் அதைக் கருத்தாய் கவனிக்க வேண்டும். தேவன் அனுப்பும் எச்சரிப்பை ஏற்றுக் கொள்ளாவிட்டால் சீக்கிரம் தேவனுடைய கோபாக்கினையை அநுபவிக்க நேரிடும்.

நான் வானத்தையும் பூமியையும் அசையப்பண்ணுவேன் என்று தேவன் சொல்லுகிறபடி பூமியின்மேல் ஏற்படும் கடைசி பூமியதிர்ச்சி தேவனுடைய ஒரு நியாயத்தீர்ப்பாகவே பூமியின்மேல் ஏற்படும். பூமி அசையும், நொறுங்கும், முறிந்துபோகும்; என்னவொரு பயங்கரம்

அது விஞ்ஞானிகள், இந்தப் பூமி பலமாக அசைந்து குலுங்குகிறது இதனால் அது ஒருநாள் அழிந்துபோம் என்று கூறுகின்றனர். பூமியதிர்ச்சிகள் இயற்கையாகத் தானாக ஏற்படுவதில்லை இந்த கேடு நிறைந்த வன்முறையும் குற்றங்களும் நிறைந்த உலகத்தின் மீது தேவன் அனுப்பும் தண்டனையேயாகும்.

சூரியன் கறுப்பாகும்!

தீர்க்கதரிசி ஏசாயா இன்னுமொரு அதிசயத்தைக் கூறுகிறார்:

''வானத்தின் நட்சத்திரங்களும் அவைகளின் கூட்டங்களும் ஒளி கொடாதிருக்கும். சூரியன் உதிக்கையில் இருண்டுபோம்; சந்திரன் ஒளி கொடாதிருக்கும்''

(13:10)

யோவேல் தீர்க்கதரிசி கர்த்தருடைய நாளைக் குறித்தும் அழிவைக் குறித்தும் சொல்லுகிறார்:

சீயோனிலே எக்காளம் ஊதுங்கள், என் பரிசுத்த பர்வதத்திலே எச்சரிப்பின் சத்தமிடுங்கள்; தேசத்தின் குடிகளெல்லாம் தத்தளிக்கக்கடவர்கள்; ஏனெனில் கர்த்தருடைய நாள் வருகிறது. அது சமீபமாயிருக்கிறது. அது இருளும் அந்தகாரமுமான நாள்; அது மப்பும் மந்தாரமுமான நாள்... பூமி அதிரும்; வானங்கள் அசையும்; சூரியனும் சந்திரனும் இருண்டு போகும்; நட்சத்திரங்கள் ஒளி மழுங்கும்.

வானத்திலும் பூமியிலும் இரத்தம் அக்கினி புகைஸ்தம்பங்களாகிய அதிசயங்களைக் காட்டுவேன். கர்த்தருடைய பெரிதும் பயங்கரமுமான நாள் வருமுன்னே சூரியன் இருளாகவும், சந்திரன் இரத்தமாகவும் மாறும்.

(யோவேல் 2:1-2, 10,30-31).

கர்த்தராகிய இயேசுவும் வரப்போகும் பேரழிவைக் குறித்து எச்சரிக்கின்றார்.

"சூரியனிலும் சந்திரனிலும் நட்சத்திரங்களிலும் அடையாளங்கள் தோன்றும்; பூமியின்மேலுள்ள ஜனங்களுக்குத் தத்தளிப்பும் இடுக்கணும் உண்டாகும்; சமுத்திரமும் அலைகளும் முழக்கமாயிருக்கும். வானத்தின் சத்துவங்கள் அசைக்கப்படும்; ஆகலால் பூமியின்மேல் வரும் ஆபத்துகளுக்குப் பயந்து எதிர்ப்பார்த்திருக்கிறதினால் மனுஷருடைய இருதயம் சோர்ந்துபோகும்"
(லூக்கா 21:25-26)

இன்னும் சில தீர்க்கதரிசனங்கள் மத்தேயு 24:29; மாற்கு 13:24-26 ஆகியவையாகும்.

சூரியன் எப்படி அந்தகாரமாகும்? சூரியனின் மையப் பகுதி வெடிப்பதனால் அது அந்தகாரப்படமுடியும் என்று கேள்விப்பட்டேன். சூரியனைக் குறித்து இந்நாட்களில் விஞ்ஞானிகள் பெருங் கவலைக் கொண்டிருக்கின்றனர். கீழ்வரும் தலைப்பிலே அதை விரிவாகக் காண்போம்.

அச்சமடையும் விஞ்ஞானிகள்!

சூரியன் அசைந்து குலுங்குவதாலும் அதின் பல்வேறு செயல்கள் குறித்தும் அச்சமடைந்திருக்கின்றனர். இன்றைய விஞ்ஞானிகள், சூரியன் வெடிக்கப்போவதற்கு இது அறிகுறி என்று அவர்கள் எண்ணுவதே இதற்குக் காரணம்.

ஒவ்வொரு ஆண்டும் சூரியன் 13 கிலோ மீட்டர்கள் சுருங்குகிறது. ஒவ்வொரு நிமிடமும் 240 மில்லியன் டன் எரிப்பொருள் அதில் எரிந்து செலவாகிறது மேலும் அதனுடைய வெப்பமும் பிரகாசமும்கூட அதிகமாகியுள்ளது. நம்முடைய காற்றுமண்டலத்தைப் பாதித்து தாறுமாறான காலநிலையை ஏற்படுத்தும் புற ஊதாக்கதிர்களும் கடந்த 10 ஆண்டுகளில் 20 % அதிகமாக சூரியனிலிருந்து

புறப்பட்டு வருகின்றன. தோல் புற்றுநோய் உட்பட சில நூதனமான தொற்றுநோய்களும், கிருமிகளும், வியாதிகளும், ஏற்பட்டுள்ளதைக் காண்கிறோம். பேரண்டத்தில் பல மாற்றங்கள் ஏற்கனவே சம்பவிக்க ஆரம்பித்துள்ளன. விண்வெளியில் அநேக விண்மீன்கள் (சூரியன்கள்) வெடிக்க ஆரம்பித்துள்ளன.

ஒரு விண்மீனில் உள்ள ஹைட்ரஜன் படிப்படியாக எரிந்து ஹீலியமாக மாறுகிறது. நட்சத்திரத்தின் மையத்தில் அந்த ஹீலியம் 40./. அளவு சேரும்போது அந்த நட்சத்திரம் வெடித்துவிடுகிறது. நமது சூரியனின் மையத்தில் ஏற்கனவே 50./ அளவு ஹீலியம் சேர்ந்துவிட்டது அப்படியிருந்தும் சூரியன் இன்னும் வெடிக்கவில்லை. அது ஏன் என்று விஞ்ஞானிகளைக் கேட்டால் அவர்களால் பதில் சொல்லமுடியாது. தேவனுடைய சரியான வேளை இன்னும் வராதபடியால்தான் அது வெடிக்கவில்லை. ஆனால் அது எந்த வேளையிலும் வெடிக்கக்கூடும். வெடிப்பதற்கு முன்பு சூரியன் மிகுந்த வெப்பமுடையதாகும். சூரியனின் மையப்பகுதி வெடிப்பதால் நமது புவிக்கோளில் உயிர்வாழும் யாவும் அழிந்துப் போகும் என்று அர்த்தமல்ல. சில குறிப்பிட்ட நாட்கள் அல்லது வாரங்களுக்கு முழு அந்தகாரமாய்க் காணப்படும். இயல்பான வெளிச்சம் கிடைக்காது. ஆனால் புறச்சிவப்புக் கதிர்கள் பூமி உறையாதபடி பாதுகாக்கும். அத்துடன் அந்தக் கதிர்கள் சந்திரனைக் கருஞ்சிவப்பு நிறமாகத் தெரியப்பண்ணும்.

கருமையான ஒரு சூரியன் உதயமாவதை நாம் கற்பனைச்செய்து பார்க்க முடியுமா? வானமும் கூடக் கறுத்துப்போகும். சூரியனைக் காணவே முடியாது. ஒரு சிவப்பு வட்டமட்டும் காணப்படும். அதுதான் அதன் விளிம்பு உட்பகுதி முழுவதும் கறுப்பாக இருக்கும். அச்சமூட்டும் பேயிருளை உங்களால் சகித்துக்கொள்ள முடியுமா?

உபத்திரவகால முடிவில் இப்படி ஒரு வெடிப்பு ஏற்படும். மனுஷகுமாரனுடைய அடையாளம் காணப்படும் வரை இந்த அந்தகாரம் நீடிக்கும். அதன்பின்பு சூரியன் புத்துயிர் பெற்று சந்திரனும் புதுப்பிக்கப்படும். சந்திரனுடைய வெளிச்சம் சூரியனுடைய வெளிச்சம் போலவும் சூரியனுடைய வெளிச்சம் ஏழு பகல்களின் வெளிச்சம் போலவும், மேசியாவின் ஆளுகைக்காலத்தில் காணப்படும் (ஏசா 30:26).

புதிய உலகிற்கான ஆயத்தங்கள்!

பூமியானது இன்னும் ஒரு தரம் அசைக்கப்படும் வேளையில் அது முடிவாகத் தன் ஆரம்ப அச்சிலோ அல்லது இன்னும் பொருத்தமான அச்சிலோ தள்ளப்படும். இதனால் உலகம் மீண்டும் ஏதேன் தோட்டமாக மாறும்.

சூரியன் புதுப்பிக்கப்படும், பூமியும் புதுப்பிக்கப்படும். மேசியா இப்பூமியை ஆளுகைச் செய்யும் ஆயிரம் ஆண்டுமுழுவதும் சூரியனும் சந்திரனும் பூமியும் நிலைத்திருக்கும்.

இயேசுகிறிஸ்து இப்பூமியில் வந்து அரசாளுவார் என்பது கற்பனையான ஒரு காரியம் என்று சிலர் கூறுவார்கள். ஆனால் வேதம் தெளிவாகச் சொல்லுகிறது: "இயேசு இப்பூமியில் வந்து நீதியோடு அரசாளுவார். அப்போது வனாந்தரமும் வறண்ட நிலமும் மகிழ்ந்து, கடுவெளி களித்து, புஷ்பத்தைப் போலச் செழிக்கும். கர்த்தரால் மீட்கப்பட்டவர்கள் திரும்பி; ஆனந்தக் களிப்புடன் பாடி, சீயோனுக்கு வருவார்கள்; நித்திய மகிழ்ச்சி அவர்கள் தலையின் மேலிருக்கும்; சந்தோஷமும் மகிழ்ச்சியும் அடைவார்கள்; சஞ்சலமும் தவிப்பும் ஓடிப்போம்" (ஏசாயா 32:1; 35:1,10).

நாங்கள் சொல்வது கடந்த ஐந்து ஆண்டுகளில் நாங்கள் சிந்தித்து உண்டாக்கிய ஏதோ ஒரு புதிய உபதேச

மல்ல கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக் குறித்து நாங்கள் கண்டு பிடித்த ஒரு காரியமுமல்ல. கிறிஸ்து வரப்போவதைக் குறித்து முதன் முதலில் தீர்க்கதரிசனம் உரைத்த தீர்க்கதரிசி ஏனோக்கு ஆவார். இப்பூமியை நியாயந்தீர்க்க கர்த்தர் தம்முடைய தூதர்களுடன் திரும்பவருவார் என்று அவர் முழங்கினார்.

''ஆதாமுக்கு ஏழாந்தலைமுறையான ஏனோக்கும் இவர்களைக் குறித்து: இதோ, எல்லாருக்கும் நியாயத்தீர்ப்புக் கொடுக்கிறதற்கும், அவர்களில் அவபக்தியுள்ளவர்கள் யாவரும் அவபக்தியாய்ச் செய்து வந்த சகல அவபக்தியான கிரியைகளினிமித்தமும், தமக்கு விரோதமாய் அவபக்தியுள்ள பாவிகள் பேசின கடின வார்த்தைகளெல்லாவற்றினிமித்தமும் அவர்களைக் கண்டிக்கிறதற்கும், ஆயிரமாயிரமான தமது பரிசுத்தவான்களோடுங்கூட கர்த்தர் வருகிறார் என்று முன்னறிவித்தான்'' (யூதா 14,15 வசனங்கள்).

தானியேல் தீர்க்கதரிசியும் மனுஷகுமாரன் மேகங்களின் மேல் வருவதைக் குறித்தும் பூமியின்மேல் நீதியாய் அவர் அரசாளப்போவதைக் குறித்தும் முன்னுரைத்தார்.

''இராத்தரிசனங்களிலே நான் பார்த்துக் கொண்டிருக்கையில் இதோ, மனுஷகுமாரனுடைய சாயலான ஒருவர் வானத்து மேகங்களுடனே வந்தார். அவர் நீண்ட ஆயுசுள்ளவர். இடமட்டும் வந்து, அவர் சமீபத்தில் கொண்டுவரப்பட்டார். சகலஜனங்களும் ஜாதியாரும் பாஷைக்காரரும் அவரையே சேவிக்கும்படி, அவருக்குக் கர்த்தத்துவமும் மகிமையும் ராஜரிகமும் கொடுக்கப்பட்டது; அவருடைய கர்த்தத்துவம் நீங்காத நித்திய கர்த்தத்துவமும், அவருடைய ராஜ்யம் அழியாததுமாயிருக்கும்'' (தானியேல் 7:13-14).

அப்போஸ்தலனாகிய பவுல், பரம எஜமானன் தம் மக்களை இப்பொல்லாத உலகிலிருந்து மீட்டுக்கொள்ள

வருவதைக் குறித்து உரைத்துள்ளார். மனுஷகுமாரன் இயேசுவுக்கு வழங்கப்பட்டதான பெயராகும். அவர் எழுத்தின்படியாகவே மேகங்களில் வருவார் என்று புதிய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசனங்களில் வாசிக்கிறோம் (அப்போஸ்தலர் 1:9-11) (I தெசலோனிக்கேயர் 4:16-17).

மேசியாவின் ஆளுகையைக் குறித்த தீர்க்கதரிசனம் பல பகுதிகளில் காணப்படுகிறது. (வெளிப்படுத்தல் 20:4,6).

ஆயிரம் வருட அரசாட்சி!

இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில் மூன்று பகுதிகள் உண்டு. முதலாவது தமது மணவாட்டியாகிய சபையைச் சேர்க்க வருவது (I தெச 4:16-17) இரண்டாவது தெரிந்துக்கொள்ளப்பட்டவர்களைக் கூட்டிச் சேர்க்க வருவது (மத் 24:30; மாற் 13:26,27; லூக் 21:27; வெளி 14:16) மூன்றாவது பூமியிலே தமது அரசாட்சியை ஸ்தாபிக்கும்படி எருசலேமுக்குக் கிழக்கே இருக்கிற ஒலிவமலையின் மேல் இறங்குவது (சகரி 14:4) என்பன ஆகும். ஒலிவமலையின்மேல் வந்து இறங்கும் ஆண்டவர் மிருகத்தையும் அவனுடைய சேனைகளையும் முறியடித்து பூமியை சாத்தானின் ஆளுகையிலிருந்து விடுதலையாக்குவார். பூமி சுத்திகரிக்கப்பட்டுப் புதுப்பிக்கப்பட்டு இதுவரை உலகம் கண்டிராத உன்னத ஆட்சி உருவாகும். சமாதானம் அமைதி, நீதி, நியாயம் என்பவை நிறைந்து ஏதேனின் செழிப்பு பூமியெங்கும் உண்டாயிருக்கும். இஸ்ரவேலர் உன்னத நிலையில் காணப்படுவார்கள். ஆபிரகாமுக்கு வாக்குப் பண்ணப்பட்ட நிலப்பிரதேசம் முழுவதையும் அவர்கள் அடைந்து கொள்வார்கள். அப்போது பூமியின் மீது தப்பி மீந்திருக்கும் சகல ஜாதிகளும் கர்த்தரையே சேவிப்பார்கள். பூமி கர்த்தரை அறிகிற அறிவினால் நிறைந்திருக்கும் (ஏசா 32:1;35:1-10; ஆப 2:14; ஏசா 11:9) பூமியிலே யுத்தங்கள் நடைபெறுவதில்லை (ஏசா

2:4; மீகா 4:3) ஜனங்கள் நீண்ட ஆயுள் உள்ளவர்களாய் இருப்பார்கள் (ஏசா 65:20,22) இப்படி இன்னும் அநேக வசனங்கள் ஆயிரம் ஆண்டு அரசாட்சி குறித்து அறிவிக்கின்றன

ஆனாலும் சிலர் ஆயிரம் ஆண்டு ஆட்சி பூமியில் இருக்காது, பரலோகத்தில்தான் என்று வாதிடுவார்கள். ஆனால் வேதம் தெளிவாகச் சொல்லுகிறது.

''அவர்களை தேவனுக்கென்று இராஜாக்களும் ஆசாரியர்களுமாக்கினீர், அவர்கள் பூமியிலே அரசாளுவார்கள்'' (வெளி 5:10).

எருசலேம் இராஜாவின் தலைநகராய் விளங்கும் (மீகா 4:7) இஸ்ரவேல் முழு உலகத்துக்கும் ஆசீர்வாதமாய் விளங்கும் (ஏசா 19:24,25).

தானியேலின் தீர்க்கதரிசியின் வார்த்தைகளில் மனுஷ குமாரனுடைய இராஜ்யம் முடிவில்லாதது நிந்தியமானது என்று இருக்கிறது. ஆகையால் அது ஆயிரம் ஆண்டுகள் மட்டுமல்ல என்று சிலர் சொல்லக்கூடும். ஆனால் இதில் முரண்பாடு ஏதுமில்லை. தானியேல் நித்தியமாக என்கிறார். யோவான் 1000 வருடம் என்கிறார். இந்த ஆயிரம் ஆண்டு நித்திய ஆட்சியின் ஒரு சிறு அம்சமே. இந்த ஆயிரம் ஆண்டுகள் முடிந்தவுடனே இந்த பூமியும், வானமும், சமுத்திரமும் இல்லாமல் போகும். புதிய வானமும் புதிய பூமியும் உண்டாகும் (வெளி 21:1) புதிய எருசலேமாகிய பரிசுத்த நகரமும் இறங்கிவரும் (21:2) இந்தப் புதிய பூமியும், புதிய வானமும், புதிய எருசலேமும் அநித்தியமானவை. அதிலேதான் தேவன் நிததியமாய் அரசாளுவார்

இங்கே ஆயிரம் வருட அரசாட்சியை பூமியிலே ஏற்படுத்துவதற்காகவே உலகத்தின் ராஜ்யங்கள் எல்லாம் நமது கர்த்தருக்கும் கிறிஸ்துவுக்கும் உரிய ராஜ்யங்களாயின (வெளி 11:15). இந்த பூமியில் ஆண்டவருடைய

சிருஷ்டிப்பில் பூரண ஆசீர்வாதங்களை நீண்ட காலத்துக்கு மனிதன் அனுபவிக்கக்கூடிய தருணம் இந்த ஆயிரம் வருட அரசாட்சிதான். ஏதேனில் ஆதாமும் ஏவாளும் தேவனுடைய ஆசீர்வாதங்களைக் கொஞ்சக்காலத்துக்கு மட்டுமே அனுபவித்தார்கள். அந்தோ சீக்கிரத்தில் அவர்கள் சத்துருவினால் வஞ்சிக்கப்பட்டு ஆசீர்வாதங்களை இழந்து போனார்கள். ஏதேன் தோட்டத்திலிருந்து முள்ளும் குருக்கும் முளைப்பிக்கும் பூமிக்கு அவர்கள் துரத்தப்பட்டனர் இப்பொழுதோ ஆண்டவர் சபிக்கப்பட்ட முழு பூமியையும் புதுப்பித்து ஏதேன் தோட்டமாக மாற்றுகிறார் சாத்தான் என்னும் வஞ்சகனையும் மனுஷரை அவன் மோசம் போக்காதபடிக்கு அந்த ஆயிரம் ஆண்டு காலம் பாதாளத்திலே தள்ளி முத்திரைப் போடுகிறார்.

தேவன் ஆளுகைச் செய்வதும், சாத்தான் இல்லாததுமான அந்தப் பூமி எப்படியிருக்கும் என்று பாருங்கள். கிறிஸ்துவானவர் ராஜாதி ராஜாவாய் அரசாளுவார். அவருடைய பிள்ளைகளான நாம் எங்கிருப்போம் என்ற கேள்வி அநேகருக்கு எழும்பலாம். ஏழு வருட உபத்திரவக் காலத்துக்கு முன்பு இரகசிய வருகையில் கிறிஸ்துவுக்கு உண்மையாய் ஜீவித்த விசுவாசிகள் யாவரும் மறுரூபமாக்கப்பட்டு அல்லது உயிரோடெழுப்பப்பட்டு கர்த்தரிடம் எடுத்துக் கொள்ளப்படுவார்கள். நம்முடைய மணவாளனாகிய இயேசு அரசாளுவதால் அவருடைய மணவாட்டியாகிய நாமும் அவரோடு கூட அரசாளுவோம். அது மட்டுமல்ல முதலாம் உயிர்த்தெழுதலில் பங்குபெறும் யாவரும் தேவனுக்கும் கிறிஸ்துவுக்கும் முன்பாக ஆசாரியராயிருந்து அவரோடுகூட ஆயிரம் ஆண்டுகள் ஆளுகைச் செய்வார்கள் என்று வெளி 20:6-ல் வாசிக்கிறபடியால் திரள் கூட்டமான பரிசுத்தவான்கள் (மணவாட்டி உட்பட) ஆயிரம் ஆண்டு ஆளுகையில் அவரோடுகூட அரசாளுவார்கள் என்பது உறுதியாகிறது. நாமும் ஆளுகைச் செய்கிறவர்களின் கூட்டத்தில் அதுவும் கிறிஸ

துவின் சபையாகிய மணவாட்டி என்னும் கூட்டத்தில் காணப்பட வேண்டும்

அந்தச் சந்தர்ப்பத்தில் நாம் எப்படிப்பட்ட நிலவரத்தில் இருப்போம் என்ற கேள்வி எழலாம். மகிமையடைந்த சரீரத்தை நாம் பெற்றிருப்போம். அதனால் இந்தச் சரீரத்தில் இருப்பது போன்ற கட்டுப்பாடுகள் அப்போது இருக்காது நாம் நினைத்த பொழுதில் பரலோகத்திலோ அல்லது பூமியிலோ இருக்கக்கூடிய ஆற்றலை மகிமையடைந்த சரீரம் பெற்றிருக்கும் எனவே பூமியில் இருக்கும் சாதாரண நிலையிலுள்ள மனிதர்களைக் காட்டிலும் நாம் மிக மேம்பட்ட நிலவரத்தில் காணப்படுவோம் நம்மால் சாப்பிடவும் முடியும் சாப்பிடாமலிருக்கவும் முடியும். ஆனாலும் நமக்கு சாப்பாடு அவசியமிருக்காது. மகிமையின் வஸ்திரம் பெற்றிருப்பதால் எழுத்தின்படியான உடைகள் தேவையில்லை. மனிதருக்கு இருக்கும் எந்தப் பாடுகளும் நமக்கு இராது அது ஓர் ஆனந்தமான நிலவரமாயிருக்கும் இப்பேர்ப்பட்ட பாக்கியத்தைப் பெறுவதற்கு நாம் எவ்வளவேனும் பாத்திரரல்ல தேவன் தம்முடைய அன்பினாலும் இரக்கத்தினாலும் நம்மை அம்மேலான பாக்கியத்திற்கு அழைத்திருக்கிறார். நாம் அவருடைய இரக்கத்தைப் பெற்று அந்தப் பாக்கியத்தைப் பெற நம்மைத் தகுதிப்படுத்திக் கொள்வோமாக!

சிறுகோள்கள் பூமியை அச்சுறுத்துகின்றன!

''பாதை மாறிய சிறு கோள்கள் ஆழமான விண்வெளியிலிருந்து பூமியின் மீது தாக்கி மனித நாகரீகத்தையே அழித்துவிடக்கூடும் என்று தேசிய விமான விண்வெளி ஆணையக ஆலோசனைச் சங்கத்தின் (NASAAC) அறிக்கைக் கூறுகின்றது''—AAP, வாஷிங்டன்.

வாஷிங்டன் செய்தி நிறுவனம் வெளியிட்ட சுவையான தகவல்தான் மேலே உள்ளது அது மேலும் கூறுவதாவது. ''பாதை மாறி வரும் கோள்களை மீண்டும் விண்

வெளிக்குத் திரும்பச் செய்வதற்காக ஏவுகணைகளையும் நீர்மவாயுக் குண்டுகளையும் பயன்படுத்த முயற்சி செய்ய வேண்டும்.''

''ஆழ்ந்த விண்வெளியில் சுமார் 800 சிறுகோள்கள் நம்முடைய பூமியில் உயிர்களை அழிக்கக் கூடிய வகையில் அச்சுறுத்திக் கொண்டிருக்கின்றன. அது போல ஒரு சிறு பகுதியை அல்லது ஒரு பட்டணத்தை அழிக்க வல்ல லட்சக்கணக்கான மிகச் சிறிய கோள்களும் உள்ளன. எனவே அவை தாக்கா வண்ணம் தடுக்க வேண்டுமானால் அவை வருவதை முன் கூட்டியே கண்டு பிடித்து நீர்ம வாயுக் குண்டுகள்மூலம் அவைகளை அழிப்பதுதான் அதற்கு ஒரே வழி என்று கூறலாம். ஆனால் அந்தத் திட்டத்திற்கு கோடிக் கணக்கான ரூபாய்கள் செலவாகும். ஆனால் ஆலோசனைச் சங்கம் சில மில்லியன் டாலர்களைக் கொண்டு ஒரு சிறிய அளவிலான திட்டத்தை ஆரம்பிக்கத் தீர்மானித்துள்ளது''

வெளிப்படுத்தல் 6:13 ல் உள்ளது போல் அநேக சிறு கோள்கள் பூமியைத்தாக்கும்போது அத்தனை கோள்களையும் இடை மறித்துத் தடுக்க போதுமான ஏவுகணைகள் இருக்குமா. நாஸாவின் இந்த விண்வெளிக்காவல் திட்டம் குறித்த காலத்தில் முடிவடையுமா என்பது சந்தேகமாகவே இருக்கிறது.

பூமி அசைகிறது. விண்மீன்கள் தாக்குகின்றன. சூரியன் கறுப்பாகின்றது. ஜனங்களின் இருதயம் பயத்தினால் கரைந்து போகிறது. பெரிய தலைவர்களும்கூட முடிவிலா ஆபத்துக்களைக் கண்டு அஞ்சி, அதைவிட சாவதே மேல் என்று எண்ணி கன்மலைகளை நோக்கி எங்கள் மேல் விழுங்கள் என்று கூப்பிடுவார்கள்

ஏசாயா 24ல் வாசிக்கிறபடி மக்கள் ஓர் ஆபத்திலிருந்து தப்பி இன்னொரு ஆபத்தில் அகப்படுவார்கள் சிலர் அணுவாயுதப்போரில் தப்பிப்பிழைப்பார்கள்.

ஆனால் பஞ்சத்தில் அடிப்பட்டு மரிப்பார்கள். பஞ்சத்திற்கும் தப்பிவிட்டால் புயலிலோ பூமியதிர்ச்சியிலோ அகப்படுவார்கள். இவைகளுக்கும் தப்பிவிட்டால் மிருகத்தை வணங்கும்படி பலவந்தப்படுத்துபவர்களிடம் அகப்படுவார்கள். மிருகத்தை வணங்குவது பிசாசை வணங்குவதாகும் என்னவொரு பயங்கரம் ஜனங்கள் மலைகளையும் குன்றுகளையும் நோக்கி, நீங்கள் எங்கள் மீது விழுந்து கொன்றுபோடுங்கள் என்று கூக்குரலிடுகின்றனர். இப்பொழுதே உலகத்தில் மன இறுக்கம் கலக்கம் ஆகியவை நிறைந்து காணப்படுகின்றன. அநேகர் தங்களையே கொலைச்செய்துக் கொள்கின்றனர். ஒவ்வொருநாளும் உலகில் ஆயிரம் பேர் தற்கொலைச் செய்து மடிகின்றனர். ஒன்பதாயிரம்பேர் தற்கொலை முயற்சியில் ஈடுபடுகின்றனர். இப்போதே இப்படியானால், எல்லாமே தாறுமாறாகவும், குழப்பமாகவும் இருக்கும். உபத்திரவகாலத்தில் நம்பிக்கை எதுவுமில்லாத அந்தச் சூழலில் ஜனங்கள் ஏமாற்றத்தினால் விரக்தியினால் நிறைந்திருக்கும் போது அவர்களுடைய செயல்கள் எப்படியிருக்கும்.

இப்பொழுது வெளி 8-ம் அதிகாரத்திற்கு நாம் திரும்பி பூமியின் மேல் அனுப்பப்படப்போகின்ற மற்ற நியாயத் தீர்ப்புகளின் பட்டியலைக் காண்போம். பரிசுத்தவான்களுக்காகப் பழிவாங்க வேண்டிய வேளை வந்து விட்டது. பரிசுத்தவான்கள் என்பவர்கள் இயேசுவை விசுவாசித்ததினிமித்தம் உலகத்தால் சிறுமைப் படுத்தப்பட்டவர்களே.

"அவர் (ஆட்டுக்குட்டியானவர்) ஏழாம் முத்திரையை உடைத்தபோது. பரலோகத்திலே ஏறக்குறைய அரை மணி நேரமளவும் அமைதல் உண்டாயிற்று. தேவனுக்கு முன்பாக நிற்கிற ஏழு தூதர்களைக் கண்டேன்; அவர்களுக்கு ஏழு எக்காளங்கள் கொடுக்கப்பட்டது.

வேறொரு தூதன் தன் கையிலே பொற்கலசத்தைப் பிடித்துக் கொண்டு பலிபீடத்தண்டையிலே நின்றான்;

சிங்காசனத்திற்கு முன்பாக இருந்த பொற்பீடத்தின் மேல் சகல பரிசுத்தவான்களுடைய ஜெபங்களோடும் செலுத்தும்படி மிகுந்த தூபவர்க்கம் அவனுக்குக் கொடுக்கப்பட்டது.

அப்படியே பரிசுத்தவான்களுடைய ஜெபங்களோடும் செலுத்தப்பட்ட தூபவர்க்கத்தின் புகையானது தூதனுடைய கையிலிருந்து தேவனுக்கு முன்பாக எழும்பிற்று.

பின்பு, அந்தத் தூதன் தூபகலசத்தை எடுத்து, அதைப் பலிபீடத்து நெருப்பினால் நிரப்பி, பூமியிலே கொட்டினான்; உடனே சத்தங்களும், இடி முழக்கங்களும், மின்னல்களும், பூமியதிர்ச்சியும் உண்டாயின''

(வெளி 8:1-5).

தேவகோபாக்கினையின் உக்கிரம் மனுஷரின்மேல் பொழிவதைத்தான் இது காட்டுகிறது. பூமியதிர்ச்சி பல பேரழிவுகளைக் குறித்து எச்சரிப்புச் செய்கிறது. பின்வரும் நியாயத்தீர்ப்புகளில் சில பனிதனால் செய்யப்பட்ட ஆயுதங்களினாலும் சில இயற்கைப் பேரழிவினாலும் ஏற்படுவதாயிருக்கும்.

எக்காளங்களின் எச்சரிப்புகள்!

நியாயத்தீர்ப்புகளை அறிவிக்கும்படி ஏழு தூதர்கள் எக்காளங்களை ஊதுகின்றனர் என்று வெளி 8-ம் அதிகாரம் 7 ம் வசனமுதல் வாசிக்கிறோம். ஒவ்வொரு எக்காளத் தொனிக்குப்பின்னும் புதிய ஒரு வாதை பூமியைத் தாக்குகின்றது.

பழைய ஏற்பாட்டில் பல சந்தர்ப்பங்களில் எக்காளம் ஊதப்பட்டது. பண்டிகையை ஆசரிக்க, யுத்தத்திற்கு ஜனங்களைக் கூட்டிச் சேர்க்க, எச்சரிப்புச் செய்ய, சபை கூடிவர என்று இப்படிப் பல சந்தர்ப்பங்களில் எக்காளம் ஊதப்பட்டது.

1 தெச 4:16 ல் கர்த்தருடைய இரகசிய வருகையை அறிவிக்க எக்காளம் தொனிக்கிறதாக வாசிக்கிறோம். அது தேவ எக்காளம். 1கொரி 15: 52 லும் இதைக்குறித்து வாசிக்கிறோம். இது கடைசி எக்காளம் என்று அழைக்கப் பட்டிருக்கிறது. இது அழைப்புக் கொடுக்கும் எக்காள மாகும். ஆனால் இங்கு வெளி 8 ம் அதிகார முதல் நாம் காணும் எக்காளங்கள் எச்சரிப்பின் எக்காளங்களாக இருக்கின்றது.

1. முதல் எக்காளம் (வெளி 8:7):-

இது ஊதப்பட்டவுடனே அக்கினியும் இரத்தமும் கலந்த கல் மழை பொழிந்தது. அதனால் பூமியின்மேல் மூன்றில் ஒரு பங்கு மரங்கள் வெந்துபோய் பசும்புல் எல்லாம் எரிந்து போயிற்று அணுவாயுதப்போரினால் இப்படிப்பட்ட அழிவுகள் உண்டாகும் சாத்தியக் கூறுகள் உள்ளன.

2. ம் எக்காளம் (வெளி 8:8-9):-

இந்த எக்காளம் ஊதப்பட்டவுடனே நெருப்புப் பற்றி எரியும் மலை போன்ற ஒன்று கடலில் போடப்பட் டது. இது எரிகிற ஒரு சிறுகோளாகவோ விண்கல் லாகவோ இருக்கலாம் இதனால் சமுத்திரத்தின் மூன்றி லொரு பங்கு இரத்தமாயிற்று. அதிலுள்ள உயிரினங்களி லும் மூன்றிலொரு பங்கு மாண்டுப்போயிற்று. கப்பல்களி லும் மூன்றிலொரு பங்கு சேதமாயிற்று.

3 ம் எக்காளம் (வெளி 8:10-11):-

மூன்றும் எக்காளம் ஊதப்பட்டவுடன் எட்டி என்ற பெயருடைய நட்சத்திரம் தீவட்டியைப்போல எரிந்து வானத்திலிருந்து ஆறுகளில் மூன்றிலொரு பங்கின்மேலும் நீரூற்றுகளிலும் விழுந்தது. அதினால் தண்ணீர்களில் மூன்றிலொரு பங்கு எட்டியைப்போலக் கசப்பாயிற்று. 1978 ம் ஆண்டு ரஷிய காஸ்மாஸ் செயற்கைக்கோள் கனடாவின் வடமேற்குப் பகுதியில் விழுந்தது. அணுச்

சக்தியினால் இயங்கும் கலமான அது வெளியிட்ட கதிர்வுகளைச் சுத்திகரிக்க பல மாதங்கள் பிடித்தது.

அணுசக்தியினால் இயங்கும் விண்கலங்கள் பல இன்னும் விண்வெளியில் சுற்றிக்கொண்டிருக்கின்றன. எனவே இங்கு விழுவதாகக் கூறப்பட்டுள்ள நட்சத்திரம் ஓர் அணுசக்தி விண்கலமாக இருக்கக் கூடும்.

அல்லது மனிதனால் உண்டு பண்ணப்பட்ட இரசாயன ஆயுதங்கள் பொருந்திய ஏவுகணைகளாக இருக்கலாம். எப்படியோ ஆறுகளும் நீரூற்றுகளுமாக நீர் நிலைகளில் மூன்றிலொருபங்கு கசப்பாய் விடும் அல்லது விஷம் கலந்துவிடும். இந்த விஷம் கலந்த தண்ணீரினால் ஏராளமான மனிதர் செத்துப் போவார்கள்.

மனிதர் இப்போது பல அழிவாயுதங்களை உண்டுப் பண்ணியிருக்கின்றனர். பொருட்சேதம் உண்டாக்காமல் மனிதர்களை மட்டும் அழிக்க வல்ல நியூட்ரான் குண்டுகள், உயர் ஆற்றல் ஒளிக்கற்றை (Hel) ஆயுதங்கள் என்று பல நவீன ஆயுதங்கள் கண்டுபிடிக்கப்பட்டு உள்ளன. ஹெல் என்ற ஆயுதம் ஒளியின் வேகத்தில் செயல்படும். இப்படிப்பட்ட ஆயுதங்களின் காரணமாக அழிவு ஏற்படும்.

4-ம் எக்காளம் (வெளி 8:12):-

4-ம் தூதனின் எக்காள தொனிக்குப் பின்பு வானத்திலே பெரும் கொந்தளிப்பு ஏற்படுகிறது. சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள் ஆகியவற்றில் மூன்றிலொரு பங்கு ஒளி குறைந்து போயிற்று. அதைப் பற்றிக் கீழே தனித்தலைப்பிலே காண்போம்.

பூமி வெப்பத்தால் தாக்கப்படும்!

சூரியன் பாதிக்கப்படுவதை இங்கும் 16ம் அதிகாரம் 8,9 வசனங்களிலும் நாம் வாசிக்கிறோம். முதலில் சூரியன் கடுமையான வெப்பத்தை வெளியிட்டு பூமியைச் சுட்டெரிக்கிறது போல இருக்கும். மிகுதியான வெப்பத்தினால்

மனிதர் தாக்கப்பட்டு அதனால் மனந்திரும்புவதற்குப் பதிலாகத் தேவனைத் தூஷிப்பார்கள்.

இதன் பின்பு சூரியனின் மையப்பகுதியில் ஏற்படும் வெடிப்பினால் சூரியனில் மூன்றிலொருபங்கு வெளிச்சம் குறைந்து போகிறது. சூரியனின் ஒளியில் மூன்றிலொரு பங்கு நஷ்டப்பட்டுப் போவதுபோல சந்திரனுக்கும் நட்சத்திரங்களுக்கும் சம்பவிக்கும்.

பூமி வெப்பத்தால் தாக்கப்படுவதற்கு மனிதனின் நிர்விசாரமே காரணம் தேவன் இயற்கையில் பூமியின் பாதுகாப்புக்காக வைத்துள்ள சாரியங்களை மனிதன் நிர்விசாரமாய் அழிப்பதால் பூமியில் வெப்பம் அதிகரிக்கின்றது. இது ஒரு தேவதண்டனையே, மனிதன் தன் நிர்விசாரமான செய்கைக்கு ஏற்றபடி இந்தத் தண்டனை அவனுக்கு வருகின்றது பூமி கடுமையான வெப்பத்தால் சுட்டெரிக்கப்படுவதால் அதன் பின் விளைவுகள் அநேகம் பூமியில் ஏற்படக் கூடும். வறட்சி, பஞ்சம் என்பவை உண்டாகக் கூடும் அதேநேரத்தில் கடும் வெப்பத்தால் நேரடியாகத் தாக்கப்படும் மனிதர்களுக்குத் தோல் சம்பந்தமான வியாதிகள் வரக்கூடும். இப்பொழுதே சூரியனிடமிருந்து வெளிப்படும் புற ஊதாக் கதிர்கள், காற்றுமண்டலத்தை ஊடுருவிச் சில இடங்களில் மனிதரைத் தாக்கி தோல் புற்றுநோயை உண்டுப் பண்ணியுள்ளது என்று செய்திகளில் வாசிக்கிறோம் மனிதன் உண்டுப்பண்ணும் மாசுகள் காற்று மண்டல ஓசோன் படிவத்தை சேதப்படுத்தியுள்ளதால் அப்படிப்பட்ட இடங்களில் இந்தச் சூரியக் கதிர்கள் ஊடுருவி விடுகின்றன.

கடைசி பூமியதிர்ச்சி!

வெளி 6ம் அதிகாரத்தின் கடைசியில் பூமியில் ஏற்படப்போகும் கடைசி பூமியதிர்ச்சியைப் பற்றி எழுதப்பட்டுள்ளது ஏழுவருட உபத்திரவக்கால முழுவதும் பல பூமியதிர்ச்சிகள் ஏற்படும் என்றாலும் இந்தப் பூமியதிர்ச்சி மிகப் பெரியதும் கடைசியானதுமாகும்.

இதிலே மலைகள் காணாமற்போகின்றன. தீவுகள் அகன்று போகின்றன. எண்ணிலடங்காதப் பட்டணங்கள் அழிக்கப்பட்டுப் போகும். செயின்ட் ஆன்ட்ரு பிளவுப் பகுதியில் பூமியதிர்ச்சிகள் ஏற்படும் என்பதை நம்புவது சுலபம். இந்தப் பெரிய பூமியதிர்ச்சி படுகைத் தென் அமெரிக்காவின் தெற்கிலுள்ள அர்ஜென்டின நாட்டில் தொடங்கி சிலிநாடு, மத்திய அமெரிக்கா, நிகராகுவா (இங்கு சில வருடங்களுக்கு முன்பு பெரும் பூமியதிர்ச்சி ஏற்பட்டது) மெக்சிகோ நாடுகளின் வழியாக கலிபோர்னியா கரையை அடைகிறது. உலகின் மிக மோசமான நகரங்களில் இரண்டான லாஸ் ஏஞ்சல்ஸ் மற்றும் சான்பிரான்சிஸ்கோ நகரங்கள் இந்தச் செயின்ட் ஆன்ட்ரு பிளவின்மீதுதான் அமைந்துள்ளது.

இந்தப் பிளவு பசிபிக் நிலமேடையையும் நெருப்பு வளையத்தையும் தொடர்ந்து செல்லுகிறது. பின்பு கலிபோர்னியா வழியாக அலாஸ்கா செல்லுகிறது. 1964ல் அலாஸ்காவில் ஏற்பட்ட பூமியதிர்ச்சியின் நடுக்கம் இந்தியா வரை உணரப்பட்டது. இந்த பிளவு பின்பு கீழிறங்கி சீனா, ஜப்பான், பிலிப்பைன்ஸ், இந்தோனேஷியா, பசிபிக் தீவுகள் வழியாக நியூஸ்லாந்து செல்லுகிறது.

ஜப்பானில் ஏராளம் நிலச்சரிவுகள ஏற்படுகின்றன. தலைநகர் டோக்கியோவில் உள்ள வான்முட்டும் கட்டடங்கள் அடிக்கடி நடனமாடுவதைப்போல அசையும் என்று நான் கேள்விப்பட்டேன்.

பசிபிக் நிலமேடையில் ஒரு பெரிய மோதல் ஏற்படுமானால் அது சங்கிலித் தொடர்புபோல யூரேஷிய, இந்திய அராபிய, ஆப்பிரிக்க நிலமேடைகளிலும் வட, தென் அமெரிக்க நிலமேடைகளிலும் பாதிப்பை உண்டாக்கும். இதனால் சீனா நெடுகிலும் இமயமலையிலும், ஆப்கானிஸ்தானிலும், ஈரானிலும், அரேபியாவிலும், இஸ்ரேலிலும், துருக்கி, கிரீஸ் நாடுகளிலும் ஐரோப்பாவிலும் தொடர்ச்சி

யாக நடுக்கம் ஏற்படுவது மட்டுமல்ல உலகமுழுவதிலும் அது உணரக்கூடியதாக இருக்கும்.

இதுதான் முழு உலக பூமியதிர்ச்சி. இப்படியெல்லாம் ஆபத்து எதிர் நோக்கியிருப்பினும கூட பூமியதிர்ச்சி ஏற்படக்கூடிய ஒரு பிளவின்மேல் அணு ஆராய்ச்சிக் கூடம் கட்டியுள்ளனர் அமெரிக்க விஞ்ஞானிகள். அதைப் பற்றிச் சிறிது காண்போம்.

நில நடுக்கப் படுகையில், நாசகார அணு உலை!

சான் பிரான்ஸிஸ்கோவிலிருந்து 64 கி.மீ தொலைவிலுள்ள ஓர் இடத்தில் அணு ஆராய்ச்சிக்கூடம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இந்த இடம் ஒரு பள்ளத்தாக்கில் அமைந்துள்ளது அதனடியிலே பன்னிரண்டுக்கும் அதிகமான நில நடுக்கப் பிரிவுகள் செல்லுகின்றன.

லாரன்ஸ் லிவர்மோர் தேசிய ஆராய்ச்சிக்கூடம் அணு ஆயுதங்களை ஆராய்ச்சிசெய்து வருகிறது. 50 இலட்சம் ஜனங்கள் வாழும் பகுதியில் நாசகார புளூட்டோனியத்தை வெளியிடும் இந்த ஆராய்ச்சி சாலையில் ஆயுத உற்பத்தி ஆராய்ச்சியினிமித்தம் பல நூறு பவுண்டுகள் புளூட்டோனியத்தை வைத்திருக்க வேண்டியிருக்கிறது

(தி சன் 5.1.81)

12க்கும் அதிகமான நிலநடுக்கப் பிளவுகள் குறுக்கு நெடுக்காக ஓடும் இந்தப் பள்ளத்தாக்கில் அமைந்துள்ள இவ்வாராய்ச்சிசாலையில் உலகின் சாவுக்கேதுவான ஆயுதங்கள் உருவாக்கப்படுகின்றன.

வெளி 16:21ல் தாலந்து நிறையான கற்கள் மழையாகப் பொழிந்தன என்று வாசிக்கிறோம். தாலந்து என்பது நூறு பவுண்டுக்குச் சமம். இது எப்படிச் சாத்தியமாகும்? இது சாத்தியமே! ஏற்கனவே இப்படி நடந்துள்ளது. 1981ஆம் ஆண்டு மார்ச் மாதம் ஆந்திரப்பிரதேசத்-

தில் பெருங்கல் மழை பொழிந்து 17 மனிதர்களும் பதி மூன்றுயிரம் ஆடு மாடுகளும் மாண்டன. 8,450 வீடுகள் இடிந்தன. அநேகர் காயமடைந்தனர். கல்மழை நின்ற வுடன் கற்களைச் சுமந்துக் கொண்டு ஓர் ஊர்வலம் நடத் தப்பட்டது. அந்தக் கற்களை நிறுத்துப் பார்க்கும்போது ஒவ்வொன்றும் 200லிருந்து 300 கிலோ வரை எடை யுள்ளதாயிருந்தது. நம்பமுடியாத ஒரு செய்தி அல்லவா? அந்தப் பகுதியில் பெரிய அளவிலான மீட்புப்பணியும் உதவியும் செய்ய வேண்டும் என்று மக்கள் கோரினர்கள் இப்படியாக நூதனமான காரியங்கள் சம்பவித்துக் கொண்டிருக்கின்றன

உச்சகட்ட அடையாளங்கள்!

உலகயுத்தம் இனி வராது என்று அநேகர் நம்பியுள்ள னர். பூமிக்கு மோசமான ஆபத்து எதும் வராது என்றும் தைரியமாய் இருப்பதுடன் முடிவுகாலம் குறித்த விஞ்ஞானிகளின் கணிப்புத் தவருகிவிடும் என்றும் எண்ணுகின்றனர். ஆனல் தீர்க்கதரிசன பார்வையிலிருந்து பார்க்கும்போது மனிதனின் 6100 ஆண்டுகால வரலாற்றின் உச்சகட்டத்தில் நாம் இருக்கிறோம் என்ப தற்கு வரிசையாக சான்றுகள் இருப்பதைக் காணலாம். குறிப்பிடத்தக்க சில தீர்க்கதரிசனங்கள் நிறைவேறியிருப்ப துடன் இன்னும் நிறைவேற ஆயத்தமாயிருக்கின்றன. அவைகளில் சிலவற்றைப் பார்ப்போம்

1. இஸ்ரவேல் நாடு அணு ஆயுத வல்லமையுடன் இராணுவ பலமுள்ள நாடாக மாறியுள்ளது (யோவேல் 3:10).

2. இஸ்ரேல் - பி. எல். ஓ உடன்பாட்டிற்குப் பின்பு எருசலேம் பட்டணம் முழு உலகத்தின் கவனத்தை யும் சார்ந்துள்ளது (சகரி 12:2-3).

3. இஸ்ரவேலுக்கு எதிராகப் படையெடுத்து வருவதற்கு சுதந்தர ரஷ்யா ஆயத்தமாகி வரும் (எசேக் 38).

4. மாஸ்ட்ரிட் உடன்படிக்கை ஐரோப்பாவை ஒன்று படுத்த வழிவகுத்துள்ளது. 10 நாடுகள் இக்கூட்டணியில் இருக்கும். அவை கிறிஸ்துவுக்கு எதிராகச் செயல்படும். இப்படி ரோமப் பேரரசு மீண்டும் உயிர்ப்பிக்கப்படும் (தானி 2:40-43 7:23-24).

5. இஸ்ரவேலுக்கு எதிராக ஒரு கடைசி யுத்தம் நடைபெறுவதற்கான ஆயத்தம் (அரபு நாடுகளின் ஆயத்தம் எரே 46:8)

6. கிழக்கத்திய அரசர்களாகிய சீனு ஜப்பான் ஆகிய நாடுகள் மிகவும் பலமடைந்து ஒரு கூட்டணி அமைப்பார்கள் (வெளி 16:12).

7. நாடுகள் பலவும் ஆயுதங்களை ஏராளமாக வாங்கிக் குவிக்கின்றன (யோவேல் 3:10).

8. தொழில் நுட்ப புரட்சியும் கணிப்பொறிகளின் பரவலான பயனும் அந்திக்கிறிஸ்து முழு உலகத்தையும் கட்டுப்படுத்த வழி உண்டாக்கும் (வெளி 13:11-18).

9. ஏராளம் நாடுகள் புது உலக ஒழுங்கு ஏற்படுத்த வேண்டுமென்று கோருகின்றன. இது அந்திக்கிறிஸ்துவின் சர்வாதிகாரத்திற்கு வழிகோலும் (வெளி 13:5-8).

10. பணப்புழக்கம் அநேக நாடுகளில் அகற்றப்படுகிறது (வெளி 13:16-17).

11. உலகப் பொருளாதார சங்கேத எண்ணுகை 666 புழக்கத்திற்கு வருகிறது (வெளி 13:18).

12. லேசர் ஒளிக்கற்றை மூலம் கண்களுக்குப் புலப்படாத 18 இலக்க எண்களைச் சில இடங்களில் மக்கள் தங்கள் கைகளில் தரித்துக்கொள்ளுகிறார்கள் (வெளி 13:16).

13. உலக மதப் பாராளுமன்றம் மற்றும் சபை ஒன்றிப்பு இயக்கம் என்பதே ஒரே கூட்டுமதத்துக்கு வழிகோலுகின்றன (வெளி 17:4-5).

14. மந்திரம், சூனியம், சாத்தான் வணக்கம் என்பனை புத்துயிர் பெற்று உலக முழுவதும் பரவலாகப் பரவு கின்றன (I தீமோ 4:1; வெளி 13:4).

15. உண்மையுள்ள விசுவாசத்தை அழிக்க சாத்தான் இயக்கமும் ஒளிர்வூட்டக்காரர்களும் சேர்ந்து உண் மைக் கிறிஸ்தவர்களைத் தாக்கிப் பேசி நெருக்கி வரு கின்றனர் (II தெச 2:7-12).

16. மறுபுறம் உலகமுழுவதும் திரளானோரை தேவன் இரட்சிக்கிறார். அவர் வல்லமையாய் அசைவாடி பின்மாரியைக் குறித்த தம் வாக்கில் ஒரு பகுதியை இப்படி நிறைவேற்றுகிறார் (யாக் 5:7).

17. சமுதாயத்தில் ஒழுக்கச் சீர்குலைவு அதிகரித்து வருகிறது (லூக் 17:26-28).

18. சமுதாயம் போதை மருந்து உபயோகம், மதுபா னம், பலாத்காரம், குற்றம், களங்கம் என்பவை களால் நிறைந்துவிட்டது (லூக் 17:26-28)

19. நாடுகளில் பயமும் திகிலும் மிகுந்துள்ளன (லூக் 21:25,26).

20. பூமியதிர்ச்சிகள், புயல்கள், கொள்ளை நோய்கள், வாதைகள், பஞ்சங்கள் அதிகரிக்கின்றன (லூக் 21:11,25).

21. தாறுமாறான காலநிலைகள் உலகமுழுவதும் இப் போது ஏற்படுவதால் பஞ்சங்கள் உலகில் ஆங் காங்கே ஏற்படுகின்றன (லூக் 21:11, வெளி 8:12).

தீர்க்கதரிசனங்களும், சுற்றிலும் காணப்படும் சான்றுகளும் இந்த யுகத்தின் உச்ச கட்டம் மிகச் சமீபமான எதிர்காலத்தில் வந்துவிடும் என்று உல கிற்குச் சுட்டிக் காட்டுகின்றன. அது எப்போது வேண்டுமானாலும் இருக்கலாம்.

என்ன நம்பிக்கை உண்டு?

இப்புத்தகத்தில் முக்கியமாக இனிச் சம்பவிக்கப் போகும் பேரழிவுகளைக் குறித்து எச்சரிப்புக் கொடுக்கப் பட்டுள்ளது. வேதாகமத் தீர்க்கதரிசனங்களும் அறிவியல் பூர்வமான ஆராய்ச்சிகளும் மிகவும் விரிவான முறையில் கூறப்பட்டுள்ளது. மகா உபத்திரவம் வரப்போகிறது. உலகம் அதற்குத் தப்ப வழியே இல்லை என்பதை எனது வாசகர்களுக்கு நன்றாய்ப் பதியவைப்பதே என்னுடைய நோக்கம்.

ஆனால் இந்த அதிர்ச்சியூட்டும் முன்னறிவிப்புகள், வேதாகமத் தீர்க்கதரிசனங்கள், நடப்புச் சம்பவங்கள் என்பவைகளுக்கும் நடுவில் நற்செய்தியை ஏற்றுக்கொள்ள மனமுள்ளவர்களுக்கு நல்ல செய்தி இருக்கத்தான் செய் கிறது. நம்பிக்கையும் அவர்களுக்கு உண்டு. தெளிவற்ற நம்பிக்கையோ, தப்புவதற்கு ஒரு சிறு வாய்ப்போ அல்ல ஆனால் வரப்போகிற பேரழிவிலிருந்து திட்டவட்டமான விடுதலை வாக்குப் பண்ணப்படப்பட்டுள்ளது.

இயேசு கிறிஸ்துவாகிய மேசியா மூலமே அந்த விடுதலை. தம்மை நம்பி விசுவாசிக்கிறவர்களுக்கு அதைத் தேவன் வாக்குப் பண்ணியுள்ளார். தம்மை விசுவாசித்து, நம்பி, தம்மைப் பின்பற்றுவோரை விடுவிக்கும்படி மேசியா வருகிறார். அவர்களே இரட்சிக்கப்பட்டு அவருக் குப் பிரியமாய் வாழும் விசுவாசிகள். மேசியாவின் வாக் குத்தத்தம் இதோ:

"உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக! தேவனிடத் தில் விசுவாசமாயிருங்கள்; என்னிடத்திலும் விசுவாசமா யிருங்கள். என் பிதாவின் வீட்டிலே அநேக வாசஸ்தலங் கள் உண்டு; அப்படியில்லாதிருந்தால் நான் உங்களுக்குச் சொல்லியிருப்பேன். உங்களுக்காக ஒரு ஸ்தலத்தை ஆயத்தம் பண்ணப்போகிறேன். நான் போய் உங்களுக் காக ஸ்தலத்தை ஆயத்தம் பண்ணின பின்பு, நான் இருக்

கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி, நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக் கொள்ளுவேன்'' (யோவான் 14:1-3).

தம்முடைய பிள்ளைகளை தமது பிதாவின் வீட்டிற்குக் கொண்டுப்போய் சேர்ப்பதாக மேசியா இங்கே வாக்குப் பண்ணியிருக்கிறார். அப்போஸ்தலனாகிய பவுலின் வார்த்தைகளையும் கவனிப்போம்:

''ஏனெனில், கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கி வருவார்; அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள். பின்பு, உயிரோடிருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர்கொண்டு போக மேகங்கள்மேல் அவர்களோடே கூட ஆகாயத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டு, இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனேகூட இருப்போம்''
(I தெச 4:16-17).

ஆண்டவர் தமது ஜனங்களை அழைக்கும்போது அவர்கள் எழுத்தின்படியாகவே எடுத்துக் கொள்ளப்படுவார்கள். இமைப்பொழுதில் அவர்களுடைய சரீரங்கள் மாற்றப்படும்

''இதோ ஒரு இரகசியத்தை உங்களுக்கு அறிவிக்கிறேன்; நாமெல்லாரும் நித்திரையடைவதில்லை, ஆனாலும் கடைசி எக்காளம் தொனிக்கும்போது ஒரு நிமிஷத்திலே, ஒரு இமைப்பொழுதிலே நாமெல்லாரும் மறுரூபமாக்கப்படுவோம். எக்காளம் தொனிக்கும், அப்பொழுது மரித்தோர் அழிவில்லாதவர்களாய் எழுந்திருப்பார்கள்; நாமும் மறுரூபமாக்கப்படுவோம்'' (I கொரி 15:51,52)

முடிவு காலத்தைக் குறித்து இயேசு பேசுகையில்...

''இவைகள் சம்பவிக்கத் தொடங்கும்போது, உங்கள் மீட்பு சமீபமாயிருப்பதால், நீங்கள் நிமிர்ந்து பார்த்து,

உங்கள் தலைகளை உயர்த்துங்கள்'' (லூக் 21:28). நம்முடைய விடுதலையைப் பற்றி பவுல் சொல்லுகிறார்:

''தேவன் நம்மைக் கோபாக்கினைக்கென்று நியமிக்காமல், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாக இரட்சிப்பை அடைவதற்கென்று நியமித்தார்''
(I தெச 5:9).

கர்த்தருடைய நாளையும் அந்தகார நாளையும் பற்றி அவர் மேலும் கூறுகிறார்.

''சகோதரரே, அந்த நாள் உங்களைத் திருடனைப் போலப் பிடித்துக்கொள்ளத்தக்கதாக நீங்கள் அந்தகாரத்திலுள்ளவர்கள் அல்லவே... பகலுக்குரியவர்களாகிய நாமோ தெளிந்தவர்களாயிருந்து, விசுவாசம் அன்பு என்னும் மார்க்கவசத்தையும், இரட்சிப்பின் நம்பிக்கையென்னும் தலைச்சீராவையும் தரித்துக் கொண்டிருக்கக்கடவோம்'' (I தெச 5:4,8).

இந்த இரட்சிப்பின் நம்பிக்கை ஒரு தெளிவற்ற நம்பிக்கையல்ல, அதாவது எப்படியாவது நாம் தப்புவிக்கப்படுவோம் என்று நினைப்பதல்ல. தேவன் நம்மை மகா உபத்திரவத்திலிருந்தும் அக்கினிக்கடலிலிருந்தும் தப்புவிப்பார் என்றதான நிச்சயமான ஒரு உறுதிமொழியாகும்.

அது இரட்சிப்பின் நம்பிக்கை என்று அழைக்கப்படுகிறது ஏனென்றால் எந்தச் சமயத்திலும் இயேசு வந்து தம்முடைய பிள்ளைகளைத் தம்மிடம் சேர்த்துக்கொண்டு, அந்த மகா உபத்திரவத்திலிருந்து தப்புவிப்பார் என்று தொடர்ந்து எதிர்ப்பார்த்துக் காத்திருப்பதாகும்.

''என் பொறுமையைக் குறித்துச் சொல்லிய வசனத்தை நீ காத்துக்கொண்டபடியினால், பூமியில் குடியிருக்கிறவர்களைச் சோதிக்கும்படியாகப் பூச்சக்கரத்தின் மேலெங்கும் வரப்போகிற சோதனைக் காலத்திற்குத் தப்பும்படி நானும் உன்னைக் காப்பேன்'' (வெளி 3:10).

வெளிப்படுத்தல் கடைசி அதிகாரத்தில் மூன்று முறை தமது சீக்கிர வரவை வலியுறுத்துகிறார்.

''இதோ சீக்கிரமாய் வருகிறேன்; இந்தப் புஸ்தகத்திலுள்ள தீர்க்கதரிசன வசனங்களைக் கைக்கொள்ளுகிறவன் பாக்கியவான். இதோ சீக்கிரமாய் வருகிறேன், அவனவனுடைய கிரியைகளின்படி அவனவனுக்கு நான் அளிக்கும் பலன் என்னோடே கூட வருகிறது இவைகளைச் சாட்சியாய் அறிவிக்கிறவர். மெய்யாகவே நான் சீக்கிரமாய் வருகிறேன் என்கிறார். ஆமென் கர்த்தராகிய இயேசுவே வாரும்'' (வெளி 22:7,12,20).

தேவன் தம்மில் அன்புகூருகிறவர்களுக்கு மகிமையான எதிர்காலத்தை வைத்திருக்கிறார்: ''எழுதியிருக்கிறபடி; தேவன் தம்மில் அன்பு கூருகிறவர்களுக்கு ஆயத்தம்பண்ணினவைகளைக் கண்காணவுமில்லை, காது கேட்கவுமில்லை, அவைகள் மனுஷனுடைய இருதயத்தில் தோன்றவுமில்லை'' (i கொரி 2:9).

மேற்கண்ட வசனத்தை ஏசாயா 64:4 ஐ மேற்கோள் காட்டி அப். பவுல் குறிப்பிடுகிறார்.

யார் தப்புவிக்கப்படுவார்கள்?

கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசித்து அவரைத் தம் சொந்த இரட்சகராய் ஏற்றுக்கொண்டு, தம் பாவங்களை அறிக்கைச் செய்து, விசுவாசித்து, தண்ணீரில் முழுகி பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே ஞானஸ்நானம் பெற்று, பரிசுத்த ஆவியின் அபிஷேகம் பெற்று, கர்த்தருக்குப் பிரியமான சாட்சிகளாய் ஜீவித்து, அவருடைய வருகையை ஆவலோடு எதிர்ப்பார்த்து ஜீவிக்கும் யாவரும் உபத்திரவகாலத்துக்குத் தப்புவிக்கப்படுவார்கள் (எபி 9:27).

இயேசு என்றால் இரட்சகர் என்று பொருள். அவர் மூலமாய் மட்டுமே பாவத்திலிருந்தும் வரப்போகிற அழிவில் இருந்தும் தப்பமுடியும் (மத் 1:21)

(பிலிப்பியர் 2:6-11) (லூக் 19:10)

உலகத்தின் பாவத்தை மேசியா இயேசு சுமந்து அதன் கிரயத்தைச் செலுத்திவிட்டார்.

பாவத்தின் சம்பளம் மரணம் (ரோமர் 6:23), ஆனால் இயேசு நமக்காகப் பலியாகி (ஏசாயா 53:6,8) நம்முடைய பாவங்களைச் சுமந்து தீர்த்துவிட்டார்.

"கிறிஸ்துவும் நம்மைத் தேவனிடத்தில் சேர்க்கும்படி அநீதியுள்ளவர்களுக்குப் பதிலாக நீதியுள்ளவராய்ப் பாவங்களினிமித்தம் ஒருதரம் பாடுபட்டார்; அவர் மாம்சத்திலே கொலையுண்டு ஆவியிலே உயிர்ப்பிக்கப்பட்டார்" (I பேதுரு 3:18).

நம்மை மகாதேவனாகிய சர்வவல்லவருடன் ஒப்புரவாக்கும் மகாபிரதான ஆசாரியர் இயேசுகிறிஸ்துவே. நமக்காகப் பரிந்து பேசும்படி என்றென்றும் அவர் உயிரோடிருக்கிறார் (எபி 7:24,25).

தம்முடைய வாக்குத்தத்தங்கள் யாவையும் நிறைவேற்ற வல்லவராய் இயேசு மாத்திரமே உயிர்த்தெழுந்து உயர்த்தப்பட்ட ஆண்டவராய் இருக்கிறார்.

எனவே கர்த்தராகிய இயேசுவை தொழுதுகொள்ளுகிற (கூப்பிடுகிற) (யாவரும்) எவனும் இரட்சிக்கப்படுவார்கள் (யோவேல் 2:32; ரோமர் 10:13).

மேலும் வாசிக்க வேண்டிய வசனங்கள் (யோவான் 3:3) (யோவான் 1:12:13) (யோவான் 3:16,17) (அப் 4:12)

அருமை வாசகரே தேவன் நம்மை கோபாக்கினையின் நாளுக்கு அழைக்காமல் தம்மோடுகூட சந்தோஷப்பட்டுக் களிகூரும்படியாகவே அழைத்திருக்கிறார். எனவே இயேசு கிறிஸ்து தம்முடைய மக்களைச் சேர்த்துக் கொள்ள வரும்போது நாமும் அவரைச் சந்திக்க ஆயத்தப்படுவோமாக!

தீர்மான ஜெபம்!

கர்த்தராகிய இயேசுவை இன்னும் இரட்சகராகவும் தெய்வமாகவும் தங்களுடைய சொந்த வாழ்க்கையில் ஏற்றுக்கொள்ளாத வாசகர்கள் யாராகிலும் இருப்பீர்களானல் பின் வரும் ஜெபத்தை விசுவாசத்துடன் ஏறெடுக்க வேண்டுகிறேன். அதற்கு முன்பு இயேசுவை உங்கள் சொந்த இரட்சகராக விசுவாசித்து உங்கள் பாவங்களுக்காக மனஸ்தாபப்படும்படியாகவும் கேட்டுக் கொள்கிறேன்.

ஜெபம்!

பரலோகப் பிதாவே! நான் ஒரு பாவியென்று உணர்ந்து உம்மிடம் வருகிறேன். உம்முடைய கற்பனைகளை மீறி நான் பாவஞ் செய்தேன். இப்பொழுது அவைகளுக்காக மனஸ்தாபப்படுகிறேன் என்னுடைய பாவங்களை உம்மிடம் நான் ஒத்துக்கொண்டு, நீர் என்னை மன்னித்து உம்முடைய பிள்ளையாக மாற்றும்படி என்னை உமக்கு முன் தாழ்த்தி மன்றாடுகிறேன்.

இயேசுவே என் பாவங்களைச் சுமந்து நீர் கல்வாரியில் பாடுபட்டு உம்முடைய இரத்தத்தைச் சிந்தி மரித்தீர். உம்முடைய பரிசுத்த இரத்தத்தால் என்னைக் கழுவிச் சுத்திகரித்து என்னை உம்முடைய பிள்ளையாக மாற்றும். உம்முடைய கிருபையுள்ள கரங்களில் என்னைத் தருகிறேன் என்னைப் பரம பிதாவிடம் ஒப்புரவாக்கும் பிரதான ஆசாரியன் நீரே என்று விசுவாசிக்கிறேன். உம்முடைய கிருபையினால் என்னைத்தாங்கி வழி நடத்தும்.

அன்புள்ள பரமபிதாவே, உம்மைப் பின்பற்றி உமக்கு உண்மையுள்ள சாட்சியாய் விளங்க நீர் என்னைப் பலப்படுத்தும். உம்மை முழுமையாய் விசுவாசித்து நம்பி உம்முடைய கரத்தில் தருகிறேன் பாதுகாத்தருளும். நான் உம்முடைய வசனங்களுக்குக் கீழ்ப்படிந்து ஞானஸ்நானம் பெற

கிருபை செய்யும் உம்முடைய பரிசுத்த ஆவியினால் என்னை அபிஷேகித்து மேலான ஆவிக்குரிய அனுபவங்களை அடியானுக்குத் தந்தருளும். கர்த்தருடைய வருகையின் நாளுக்கென்று என்னை உமது இரத்தத்தினால் ஆயத்தப் படுத்தும். என் ஜெபங்களைக் கேட்டபடியால் உமக்கு நன்றி. இயேசுவின் நாமத்தில் பிதாவே. ஆமென்.

அருமையான வாசகர்களே, நீங்கள் இன்றே கர்த்தரை ஏற்றுக்கொண்டு ஆசீர்வாதம் பெறுவீர்களாக! இப்போதே அநுக்கிரக காலம், இதுவே இரட்சண்ய நாள்

(II கொரி 6:2).

அன்பு வாசகர்களே!

உங்கள் ஆண்டு சந்தாவை புதுப்பித்து விட்டீர்களா?

இன்றே பதிவு செய்து பயன் பெறுங்கள்.

மாரநாதா தீர்க்கதரிசன எச்சரிப்பு
50, ரெயில்வே ஸ்டேஷன் ரோடு
கோடம்பாக்கம், சென்னை-24.

வாசியுங்கள்!
தியானியுங்கள்!!
உங்கள் நண்பர்களுக்கு
அறிமுகம் செய்யுங்கள்!!!

'மாரநாதா தீர்க்கதரிசன எச்சரிப்பு'
ஆண்டு சந்தா ரூ. 30/- மட்டுமே
வெளிநாட்டு சந்தா ரூ. 300/-
மட்டுமே!

M.R.C English Books

1.	Mystery 666	12 00
2.	Name above all Names	12 00
3.	Tishrei Journal No. 1	20 00
	Tishrei Journal No 2	20 00
	Tishrei Journal No 3	20 00
4.	The budding of the fig tree	20 00
5.	The Seed of Abraham	20 00
6.	God's amazing Seal 777	5 00
7.	Failure is not final	4 00
8.	Protestants, Catholics	4 00
9.	Coming world wide rapture	4 00
10.	Lord useeven me	4 00
11.	Magnificent promises	5 00
12.	Constant combat	6 00
13.	Our Renegade planet	4 00
14.	Living prayer celis	2 00
15.	Millennium-Messiah Reigns	5 00
16.	What's the world coming to?	2 00
17.	Coming world Holocaust	2 00
18.	After death what?	3 00
19.	This is the way	2 00
20.	Left Behind	5 00
21.	World in conflict (PA)	2 00
22.	Asias modernjunk (PA)	2 00

தமிழ் புத்தகங்கள்

1.	மேசியா ஆளுவார்-ஆயிரமாண்டு ஆளுகை	3 00
2.	தீர்மானியுங்கள் இன்றே	5 00
3.	கைவிடப்பட்டால்	5 00
4.	ஏறெடுத்துப் பாருங்கள்	5 00

மேற் குறிப்பிட்டுள்ள புத்தகங்கள் வேண்டுவோர் அதற்குரிய தொகையினை அனுப்பிப் பெற்றுக்கொள்ளுங்கள்.

புஸ்தகங்கள் கிடைக்கும் இடம்:

J. சாம்ஜெபத்துரை, M.A.,
50, ரெயில்வே ஸ்டேஷன் ரோடு,
கோடம்பாக்கம், சென்னை-600 024.